# எதிரொலி ETHIROLI

ஆஸ்திரேலியா

குரல் 05 அதிர்வு 51 செப்ரெம்பர் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162







# வல்லரசுகளின் வரலாற்றுப் பெரும் பழி



Photo credit: www.7news.com.au







ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA
Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

# ‘திருடப்பட்ட தலைமுறைகள்’ பணம் கொடுத்து சமாளிப்பு



Picture : www.abc.net.au

● கோகுலன் சிட்னி

பெரும்பான்மை ஆதிக்கத்தைப் பற்றித் தமிழர்களுக்கு அதிகம் விளக்கத் தேவையில்லை. ஆங்கிலேயர் காலம் தொட்டும், ஏன் அதற்கு முன்னேயும், தமிழர்கள் ஏதாவது ஒரு வகையில் ஆதிக்கச் சக்திகளின் கீழ் துன்பங்களைச் சந்தித்திருக்கிறார்கள். ஆனால், ஆஸ்திரேலிய பூர்வக்குடிகளின் ‘திருடப்பட்ட தலைமுறைகள்’ வரலாறு, நெஞ்சைப் பிழிந்து கண்ணீரை வரவைக்கக் கூடியது என்பதுதான் உண்மை.

காலனித்துவ ஆதிக்கமும், மத அடிப்படைவாதமும், நிற மற்றும் இன மேட்டிமை எண்ணமும், எவ்வாறு நூறு ஆண்டுகளுக்கு மேல், பல்லாயிரக் கணக்கான பூர்வக்குடிகள் குழந்தைகளை அவர்கள் பெற்றோரிடம் இருந்து பிரித்து எடுத்து, மாபெரும் கொடூர வரலாற்றை அரங்கேற்றியுள்ளது என்பதற்கு இதைப் போன்ற ஒரு சான்று கூற முடியாது. அதன் ஆழமான தாக்கம், தலைமுறைகள் தாண்டிய மரபியல் ரீதியான அதிர்ச்சியை, அவர்கள் குழந்தைகளுக்கும், பேரக் குழந்தைகளுக்கும் இன்றும் விட்டுச் சென்றிருக்கிறது.

திருடப்பட்ட தலைமுறையினர் 1800களின் நடுப்பகுதியில் இருந்து, 1970-கள் இறுதி வரை, அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களின் வழியாக, கிறிஸ்தவ மிஷனரிகள் மற்றும் காவல் துறையினர் உதவியுடன், ஆஸ்திரேலிய பூர்வக்குடிகள் மற்றும் டோரஸ் ஸ்ட்ரெய்ட் பூர்வக்குடிகளின் குழந்தைகள், அவர்களின் குடும்பத்தினரிடமிருந்து வலுக்கட்டாயமாக பிரித்தெடுக்கப்பட்டனர். இவ்வாறு பிரித்தெடுக்கப்பட்ட குழந்தைகளே, ‘திருடப்பட்ட தலைமுறையினர்’ என்றழைக்கப்படுகிறார்கள்.

இந்த இரக்கமற்ற பாதகச் செயலானது, அவர்களது சமூகங்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் என தலைமுறை தாண்டிய நெடிய அதிர்ச்சியையும், ஒரு மிகப்பெரும் பாரம்பரிய இழப்பின் வலியையும் இன்றுவரை பழங்குடியின மக்கள் பலர் சுமந்து கொண்டிருக்கின்றனர்.

### என்ன நடந்தது? ஏன் நடந்தது?

தெற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு பாறை ஓவியம், சுமார் 45,000 ஆண்டுகளுக்கு முன் மனிதன் அப்பகுதியில் வாழ்ந்திருப்பதை அறிவியல் மூலமாக அறிவிக்கிறது. அவ்வாறு இயற்கை வழி வாழ்ந்து நிலைத்து வந்த பூர்வக்குடிகளின் குழந்தைகளை, மேட்டிமைச் சமூகத்தோடு மேற்கத்திய வழியில் மேம்படுத்தல் என்கிற அரசுத் திட்டத்தின் கீழ், வலுக்கட்டாயமாக அவர்களின் குடும்பத்தினரிடமிருந்து பிரித்திருக்கிறார்கள்.

அதாவது, வெள்ளையர் சமூகத்தின் ஒரு பகுதியாக மாறினால், பழங்குடிகள் மற்றும் டோரஸ் தீவுவாசிகளின் வாழ்க்கை மேம்படும் என்கிற தவறான அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டு, அரசாங்கத்தின் கொள்கைகளும் அதன்வழி வந்த திட்டங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

இதில் கொடுமை என்னவென்றால், இதற்குப் ‘பழங்குடியினர் பாதுகாப்புச் சட்டம்’ எனப் பெயரிட்டு, அதைச் சட்ட வடிவில் 1869 இல் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் எந்தவொரு பழங்குடியினக் குழந்தையையும் அவர்களின் குடும்பத்திலிருந்து சீர்திருத்த அல்லது தொழில்துறை பள்ளிக்கு எடுத்துச் செல்ல ஆளுநர் உத்தரவிடலாம்.

1900 களின் முற்பகுதியில், பூர்வீக குடிகள் நல வாரியம் என்ற ஒன்றை உருவாக்கி, மேலும் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை, குறிப்பாக அரை இரத்தம் (Half Caste) அதாவது கலப்பின குழந்தைகளைக் குறிவைத்து, கண்ட இடங்களில் எல்லாம் இழுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள் வெள்ளையின வெறியர்கள்.

1965-ஆம் ஆண்டு வரை, பூர்வீக நல இயக்குனராக நியமிக்கப்பட்டவர்தான், பிரிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோர்கள் உயிருடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தக் குழந்தைகளின் சட்டப்பூர்வ பாதுகாவலர் ஆவார்.

### தலைமுறைகள் தாண்டிய தாக்கம்:

பழங்குடிகள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் திருடப்பட்ட மற்றும் வலுக்கட்டாயமாக நீக்கப்பட்ட குழந்தைகள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் குடும்பங்கள், அவர்களின் சந்ததிகள் என அனைவருக்கும், மீள முடியாத அதிர்ச்சியும், கலாச்சாரத் துண்டிப்பும், பேரழிவைத் தரும் மன உளைச்சலும் இன்று வரை இருப்பதைக் காண முடிகிறது.

மேலே சொன்ன மூன்று குழுக்களும் அதிக மனச்சோர்வு, பதட்டம், விஞ்சிய மன அழுத்தம், தற்கொலை, மோசமான உடல்நலம் மற்றும் சமூகப் பொருளாதார விளைவுகளை அனுபவித்து வருகின்றனர்.

குழந்தைகளாக எடுத்துக் கொள்ளப்பட்ட பலர், அரசு பராமரிப்பு அல்லது தத்தெடுத்த குடும்பங்களுடன் வாழ்ந்தபோது உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டனர்.

திருடப்பட்ட குழந்தைகளுக்கு, அவர்களின் கலாச்சாரத்தை நிராகரிக்க செய்யும் பொருட்டு, அவர்களின் பூர்வீகப் பாரம்பரியம் பற்றிய அவமான உணர்வை உருவாக்கினார்கள்.

பலருக்கு அவர்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டனர் அல்லது அவர்களின் உயிரியல் குடும்பங்கள் யார் என்று தெரியாமலேயே போனது.

குழந்தைகளைத் தத்தெடுத்த மிஷனரி நிறுவனங்கள் மற்றும் குடும்பங்கள், மிகக் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தன. மேலும் குழந்தைகள் அடிக்கடி கடுமையாக தண்டிக்கப்பட்டனர். குளிர் மற்றும் பசியுடன் இருந்தனர்.

குழந்தைகள் பொதுவாக மிகக் குறைந்த அளவிலான கல்வியையே பெற்றனர். ஏனெனில் அவர்கள் கைவினைத் தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வேலைக்காரர்களாக வேலை செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இது வாழ்நாள் முழுவதும் பொருளாதார தாக்கங்களை உருவாக்கியது. இப்போது பெற்றோர்களாக இருக்கும் பலர் தங்கள் குழந்தைகளுக்கு பள்ளி, வேலை மற்றும் கல்விக்கு உதவ முடியவில்லை என்கிற நிலையும் உள்ளது.

### ஏன் இவர்கள் வரலாறு இன்றும் முக்கியமானது?

ஆஸ்திரேலியாவில், தற்போது 17,ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருடப்பட்ட தலைமுறையினர் தப்பிப்பிழைத்துள்ளனர். ஆதிவாசி மற்றும் டோரஸ் தீவு-வாசிகளில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் அவர்களின் சந்ததியினர் என்பதும், மேற்கு ஆஸ்திரேலியாவில் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் திருடப்பட்ட தலைமுறை இணைப்புகளைக் கொண்டுள்ளனர் என்பதும் கவனிக்க வேண்டியதாகும். இதன் தாக்கம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கும் அனுப்பப்படுகிறது.

அனைத்து மக்களுக்குமான ஒரு ஆஸ்திரேலியாவை உருவாக்குவதில், இத்தகைய வலி மிகுந்த வரலாற்றையும் நாம் அறிந்திருக்க வேண்டும். அறிவதோடு மட்டுமல்லாமல், அதை ஒப்புக் கொள்ளவும் வேண்டும். நம் தமிழர்கள் பலர் ஆஸ்திரேலிய அரசியல் களம் காணச் செல்கிறார்கள், செல்வார்கள். குறிப்பாக எதிர்கால அரசியல்வாதிகள் இத்தகைய வரலாற்றை உள்வாங்கிக் கொண்டு செயல்பட வேண்டும். ஆஸ்திரேலியாவில் வாழும் அனைத்து மக்களின் குரல்களும் கேட்கப்பட வேண்டும் என்பதே நாம் கற்றுக் கொள்ள வேண்டிய வரலாற்றுப் பாடம் ஆகும்.

### இன்றைய அரசாங்கங்கள் என்ன செய்தன?

சமீபத்தில், பிரதமர் ஸ்கொட் மொரிசன் தலைமையிலான காமன்வெல்த் அரசாங்கம், திருடப்பட்ட தலைமுறையினருக்கு, 378 மில்லியன் டொலர் இழப்பீடு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டம் கீழ், வே - யுஊவு மற்றும் ஜெர்விஸ் பே பகுதியில் வாழும் தப்பிப்பிழைத்தவர்கள் ஒவ்வொருவரும் $ 75,000 க்கும் அதிகமான தொகையை இழப்பீடாக பெறத் தகுதியுடையவர்கள். ஆனால், திருடப்பட்ட தலைமுறைகளின் இறந்த குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் தகுதியற்றவர்களாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, பல்லாயிரக் கணக்கான திருடப்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் எந்த வித இழப்பீடும் பெறாமல், தங்கள் வாழ்நாட்களை துயரத்துடன் கழித்திருப்பார்கள் என்று நினைக்கவே மனம் கணமாகிறது.

உயிருடன் இருக்கும் பலர், 50 ஆண்டுகளுக்கு மேல் இதைப் பற்றி பேசாமல் இருந்துள்ளனர். அரசாங்கத்தின் புதிய இழப்பீட்டுத் திட்டத்தின் மூலம், அவர்கள் தங்கள் கதையைச் சொல்லவும், அவர்கள் தேர்வுசெய்தால், காமன்வெல்த் அரசாங்கத்திடமிருந்து எழுத்துப்பூர்வமாக அல்லது நேருக்கு நேர் மன்னிப்பு பெறவும் வாய்ப்பு வழங்கப்படும்.

இதற்கு முன், 2008 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் கெவின் ரட் அவர்கள், தேசிய மன்னிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன் பிறகு, ஒவ்வொரு ஆண்டும், பிப்ரவரி 13-ஆம் நாள், தேசிய மன்னிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இது வரை கேட்கப்படாத திருடப்பட்ட தலைமுறையினரின் குரல்களைக் கேட்கும் வாய்ப்பாக, அனைத்து ஆஸ்திரேலியர்களுக்கும் இந்த மன்னிப்பு தினம் விளங்குகிறது.

### இழப்பீடு போதுமா?


குழந்தைகளை கட்டாயமாக பிரித்தெடுக்கும் கொள்கைகள் 1910 - 1969 வரை நடைமுறையில் இருந்தன. ஆனாலும் இந்தத் தேதிகளுக்கு முன்னும் பின்னும் வலுக்கட்டாயமாக நீக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் மற்றும் அவர்களைப் பிரிந்த குடும்பங்களின் கதைகள் இன்றும் நம்மைச் சுற்றி வலம் வருகின்றன.

இன்றைய இழப்பீட்டுச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக, பல ஆண்டுகளாகப் போராடிய உழைத்த பலர் இன்று இல்லை என்பது சோக நிலை மட்டுமல்ல, அவர்களின் அயராத சட்டப்போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியைக் காண அவர்கள் இல்லை என்பதும் கவலை தரக் கூடிய நிலை.

2008 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர் கெவின் ரட், பழங்குடியின மக்களிடம் மன்னிப்பு கேட்டபோது, ஆஸ்திரேலியர்கள் இது மாற்றத்தைக் குறிக்கும் என்று நம்பினர்.

ஆனால் திருடப்பட்ட தலைமுறையினருக்கு அந்த தேசிய மன்னிப்பின் 12 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு நடைபெற்ற ஒரு நிகழ்வில், பழங்குடி விருந்தினர்கள், அரசாங்கத் திட்டங்கள் மிகச் சிறிய மாற்றத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைப் பிரதிபலித்தனர்.

பல ஆண்டுகளாக மறுக்கப்பட்டு, தற்பொழுது கொடுக்கப்படும் இழப்பீடு, வெறும் பணம் மட்டுமா அல்லது மாற்றத்தை உருவாக்கும் என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால், பணத்தால் ஒரு போதும், இழக்கப்பட்ட கலாச்சாரத்தை, மொழியை, குடும்பத்தை, சமூக அமைப்பை திருப்பித் தர இயலாது என்பது உறுதி. ■


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza
Shopping Centre, 49-55 McCrae Street,
Dandenong VIC 3175

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:03 அதிர்வு: 51 செப்ரெம்பர் 2021 தொ.பே:1800 960162

# வல்லரசுகளும் வால்பிடிகளும் வரலாற்றில் வாங்கிய பெரும் பழி

அமெரிக்காவின் ஆதிக்கப்பசிக்கு இரையாகியிருந்த ஆப்கானிஸ்தான் அண்மையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் இதனை ஆப்கானிஸ்தானுக்கான விடுதலையாகக் கருதமுடியாது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்து எதற்காக என்ற கேள்விக்கு அமெரிக்க- நேசப்படைகளின் வெளி யேற்றத்தின்போதும் உரிய விடை கிடைக்கவில்லை.

உலகத்துக்கே பொலிஸ்காரனாக தன்னை முன்னிறுத்த அமெரிக்கா முன்னெடுக்கும் போர்ச்சகதிகளுக்குள் சிக்கி, பயங்கரவாதிகள் சிதறுகின்றனரோ இல்லையோ – லட்சக் கணக்கான அப்பாவி மக்களின் வாழ்வும், மகிழ்வும் சின்னாபின்னமாகும் தொடர்கதை ஆப்கான் வரை நீள்கின்றது.

ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறும் போது, தமது படைகளுக்கு சொந்தமான பல நவீன பேரழிவு ஆயுதங்களை அமெரிக்கா விட்டுச்சென்றதுடன், உள்நாட்டு கலகங்களையும் உருவாக்கத் தவறவில்லை. இதனால் ஆப்கானிஸ்தான் எப்போதும் எரியும் தேசமாக இருப்பதை அமெரிக்கா உறுதிப்படுத்தி யுள்ளது.

அமெரிக்கா என்ன காரணத்துக்காக ஆப்கானுக்குள் காலடியெடுத்து வைத்தது?

2001 செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்த அல்–கெய்தா அமைப்பின் தலைவர் ஒஸாமாவை வேட்டையாடுவதற்காகவே என்றே சொல்லப் பட்டது. ஆனால் ஆப்கானை முழுதுமாக ஆக்கிரமித்த பின்னரும் அங்கு ஒஸாமாவின் நிழலைக் கூட அமெரிக்கா கண்டிருக்கவில்லை. பின்னொரு நாளில் அதே ஒஸாமா பின் லேடன் அமெரிக்காவால்,பாகிஸ்தானில் வைத்துக் கொல்லப்பட்டிருந்தார். அப்படியானால் உண்மையில் அமெரிக்கா ஒஸாமாவுக்கு அடைக்கலம் கொடுத்த, பாகிஸ்தான் மீதல்லவா போர் தொடுத்திருக்கவேண்டும்? எனினும் அப்படி எந்தப் போர்முனைப்பையும் அமெரிக்கா பாகிஸ்தான் மீது காட்டவில்லை.

ஆகவே ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க ஒஸாமை ஒரு சாட்டாகத்தான் அமெரிக்கா பயன்படுத்தியதென்பது கண்கூடு.

ஆப்கானோடு மட்டும் ஓயாமல், தான் கண்வைத்திருந்த நாடுகளையெல்லாம் விழுங்கி ஏப்பமிடுவதற்கு, ஒஸாமாவின் பேரால் 'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்'என்ற போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டது அமெரிக்கா. அந்தத்திரைக்குள் ஒட்டுமொத்த பயங்கரவாதத்தையும் புரிந்து தனது நலனுக்கு எதிரான நாடுகளின் தலைமைகளை அமெரிக்கா கூண்டோடு காலி செய்தது. ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான் என அந்தப் பட்டியல் நீள்கின்றது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பேரில் ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளின், வளங்கள் சுரண்டப்பட்டு, மக்களின் இயல்பு வாழ்வையும் குலைத்துப் போட்டது மட்டுமே அமெரிக்காவுக்கு ஆதாயம்.

மாறாக எந்தப் பயங்கரவாதத்தை ஒழிக்க போர் தொடக்கப்பட்டதோ அந்தப் பயங்கரவாதம் அழிக்கப்படவேயில்லை. மாறாக மீண்டும் பயங்கரவாதம் வலிமையோடு மீண்டெழும் வழிகளையே அமெரிக்கா அகலத் திறந்துள்ளது. அதன் ஒரு குறுக்குவெட்டுமுகச் சாட்சியே காபூல் விமானநிலையத்தில் கடந்தமாதம் முழுதும் நிகழ்ந்த மனிதப் பேரவலம்.

அமெரிக்கப் படைகள் தங்களைக் கைவிட்டு, வெளியேறுவதை அறிந்தவுடன், விமான நிலையத்தை முற்றுகையிட்ட அப்பாவி மக்கள் தங்களின் உயிர்களை பாதுகாத்துக்கொள்ள விமான இடுக்குகளிலெல்லாம் தொற்றிக் கொண்டனர். தொற்றிக்கொண்டவர்களில் பலர் இடைநடுவே வீழ்ந்து மாண்டனர். அத்துடன் நின்றுவிடாது தற்கொலைத்தாக்குதலுக்கும் இலக்காகிச் சிதறினர்.

இருபது வருட கால வல்லரசுகளின் ஆதிக்க ஆப்பகானிஸ்தானில் சுமார் ஐந்து லட்சத்துக்கும் அதிகமானோர் உள்ளூரிலேயே இடம்பெயர்ந் துள்ளனர். இனி 30 இலட்சம் பேர் வரை புலம்பெயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என ஓர் ஆய்வு சொல்கிறது.

காபூலின் வீழ்ச்சிக்குப்பின்னர் ஒவ்வொரு நாடும் தங்களால் ஏற்றுக்கொள்ள கூடிய அகதிகளின் எண்ணிக்கை குறித்து அறிவித்து வருகின்றன. ஆனாலும் ஐரோப்பிய நாடுகள் தங்களது எல்லைகளுக்கு இறுக்கமான பூட்டை போட்டு மூடியும் இருக்கின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கு உட்புக முயற்சிக்கும் ஆப்கானிஸ் தான் மக்கள் எல்லைச்சுவர்களையும் முள்வேலிகளையும் முட்டிமோத வேண்டிய நிலை. ஏனெனில் அகதிகளுக்கு தாம் சார்பான வர்கள் எனக் காட்டிக்கொள்ளும் நாடுகளெல்லாம் தங்களது அரசியல் இருப்பை தக்கவைத் துக்கொள்ள மறுபுறம் அகதிகளுக்கெதிரான செயற்பாடுகளுக்கும் வடிவம்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது.

இதேவேளை, ஆஸ்திரேலியா, 3 ஆயிரம் ஆப்கானிஸ்தான் மக்களை உள்வாங்குவதாக அறிவித்திருக்கிறது.

“மனிதாபிமானடிப்படையில் வருடாந்தம் ஏற்றுக்கொள்ளும் அகதிகளின் எண்ணிக்கை யிலேயே அந்த 3ஆயிரம் பேரும் அடங்கும். அத்துடன்,கடல்வழி மார்க்கமாக நாட்டுக்குள் பிரவேசித்தால் தாம் ஒரு போதும் அனுமதிக்க போவதில்லை” என திட்டவட்ட மாக அறிவித்திருக் கிறார் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட்மொறிஸன். அதேவேளை, ஆஸ்திரேலியாவில் மாணவர் மற்றும் ஏனைய விசாக்களில் உள்ளோர் நிரந்தர விசாக்களுக்கு விண்ணப்பிக்கலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் படகுவழி வந்து நவ்வுறு, பப்புவா போன்ற தீவுகளில் அடைபட் டிருக்கும் ஆப்கானியர்களை ஒருபோதும் குடியமர்த்தபோவதில்லை எனவும் அறிவித் திருக்கிறார் பிரதமர்.

படகுவழி வரும் அகதிகளை தடுத்து நிறுத்துவோம் என்ற பிரசார அரசியலோடு ஆட்சியை பிடித்த லிபரல் அரசு, படகுவழி வந்த அகதிகளை இன்னும் தடுப்பு முகாம்களுக்கு தனது கோர சட்டங்கள் ஊடாக முடக்கிக் கொண்டுதான் இருக்கின்றன.

அகதியாக வந்த சுகதேகிகளை நவ்வுறு பப்புவா போன்ற கந்தக காடுகளின் நடுவே தடுப்புகாவல்களை உருவாக்கி நோயாளி களாக்கிய பின்னரும் மருத்துவ தேவைக்காக நாடு நாடாக கடத்தி வைத்தியம் பார்த்ததும் லிபரல் அரசுதான். அதுமட்டுமின்றி மெடிவக் திட்டத்தின் கீழ் பப்புவ நவ்று தீவு தடுப்புகளிலிருந்து ஆஸ்திரேலியா கொண்டுவரப்பட்ட அகதிகளை சுமார் இரண்டு வருடங்களுக்கு மேலாக ஹோட்டல்களில் நான்குக்கு நான்கு அறைகளுக்குள் தடுத்து வைத்திருக்கிறதும் இதே லிபரல் அரசு. படகுவழி அகதிகளை லிபரல் அரசு தடுத்து நிறுத்தி சுமார் எட்டுவருடங்களை எட்டியுள்ள நிலையிலும் அவ்வழி வந்த அகதிகளை அரசியலுக்காக தடுத்து வைத்திருப்பது ஜனநாயத்தின் மீதான கேள்வியை எழுப்புகிறது.

சுமார் எட்டு தொடக்கம் பத்து வருடங்களுக்கு மேலாக ஆஸ்திரேலிய – எல்லைதாண்டிய கந்தகத் தடுப்பு முகாம்களுக்குள்ளும் தடுக்கப்பட்டிருக்கும் அனைத்து அகதிகளுக்கும் அவை இன்னோர் ஆப்கானிஸ்தானே..! ■

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

## REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin





Picture : www.abc.net.au

# புத்தர் ஞானம் பெற்ற போதி மரம்

# ஆஸ்திரேலியாவில் சிறப்பு கண்காணிப்பில்

போதி மரமென சிங்களவர்களால் விளிக்கப்படும் வெள்ளரசு மரத்துக்கு இலங்கையில் தனி மரியாதையுண்டு. அதனை வெட்டி அகற்றுவதுகூட பாவச்செயலாகவே பார்க்கப் படுகின்றது. கிராமப்புறங்களில் இந்துக்கள் ஆலமரங்களின்கீழ் சிறுதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதுபோலவே சிங்கள, பௌத்த மக்களும் அந்த மரத்தை வழிபாடுவார்கள். தமிழர்கள் மத்தியிலும் வெள்ளரவு மரத்துக்கு ஆன்மீக வழியிலும் நம்பிக்கை உள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள வெள்ளரசு மரம் அதி முக்கியத்துவம்மிக்கதாக விளங்குகின்றது. பௌத்த சமயத்தின் அடையாளமாக - பாரிய விருட்சமாக அது வளர்ந்து நிற்கின்றது. குறித்த மரத்துக்கென தனி வரலாறும் உள்ளது.

தேரவாத பௌத்த நாடான இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக சிங்கள, பௌத்த மக்களே திகழ்கின்றனர். அவர்களை வழிநடத்துவது மகா நாயக்க தேரர்கள். ஆட்சியாளர்களின் கட்டளைகளைவிடவும், மகாநாயக்கர்களின் உத்தரவுக்கு மக்கள் கட்டுப்படுவார்கள். மகாநாயக்க தேரர்களாலும் அநுராதபுரம் புனித பூமியாக கருதப்படுகின்றது. அந்த மண்ணுக்கு அன்று முதல் இன்றுவரை ஆன்மீக ரீதியில் முக்கியத்துவம் கொடுக் கப்படுகின்றது.

எனவே, ஆன்மீகத்துக்கு அப்பால் அரசியல் ரீதியாகவும் அநுராதபுரத்தில் உள்ள வெள்ளரசு மரம் அமைந்துள்ள வளாகம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஆட்சியாளர்களுக்கு நெருக்கடி ஏற்படும் தருணங்களில் எல்லாம் அங்கு சென்று வெள்ளரசு மரத்தை தொட்டு வணங்குவார்கள். பொசன் நாளன்று பெருமளவானவர்கள் அங்குசென்று விசேட வழிபாடுகளில் ஈடுபடுவார்கள்.

அதுமட்டுமல்ல இலங்கைவரும் பன்னாட்டு இராஜதந்திரிகள்கூட தலதாமாளிகைக்கு அடுத்தப்படியாக இங்குசென்றுதான் வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். இலங்கைக்கு சங்கமித்தை வெள்ளரச மரக்கிளையுடன் வருகைத் தந்த தினமே பொசன் தினமாக கொண்டாடப்படுகிறது. புத்தர் ஞானம் பெற்ற அந்த வெள்ளரசு மரத்தின் கிளையில் இருந்து வளர்க்கப்பட்டதே அங்குள்ள மரமாகும்.

## வெள்ளரசு மரம் வந்த கதை...

கலிங்கப் போரின் இறுதியில் யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட மாபெரும் மனிதப் பேரழிவினால் அசோக மன்னன் பௌத்த பிக்குவின் உபதேசத்தைப் பெற்று பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டார் . அசோகனின் மகன் மகிந்தன், சங்கமித்தை ஆகியோரும் பௌத்த மதத்தை தழுவி பௌத்தத் துறவிகளானார்கள். பௌத்த மதத்தை பரப்புவதற்காக இருவரையும் வெளிநாடுகளுக்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

அசோகனின் இதே காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட தேவநம்பிய திஸ்ஸன் அசோகனின் சமகாலத்து நண்பன். தேவநம்பியதிஸ்ஸனின் வேண்டுகோளின் பிரகாரம் அசோகன் இலங்கையில் பௌத்தத்தை நிறுவுவதற்காக மகிந்தனையும் சங்கமித்தையையும் அனுப்பினார்.

முதலில் மகிந்தனே இலங்கைக்குச் சென்று இலங்கை மன்னனுக்கு, புத்தர் அமர்ந்து ஞானம் பெற்ற வெள்ளரசு மரத்தின் கிளையொன்றைத் தருவதாக வாக்குறுதி கொடுத்திருந்தார். இதனை நிறைவேற்று முகமாக அசோகனே அவ்வெள்ளரசு மரம் இருக்கும் இடம் சென்று கிளையொன்றை வெட்டுவித்து சங்கமித்தவிடம் கொடுத்து அனுப்பியதாகவும் இலங்கையின் பௌத்த வரலாற்று நூலான மகாவம்சம் கூறுகிறது.

இலங்கையில் பௌத்த பிக்குணிகளின் மரபும் இங்கிருந்து தான் தொடங்குகிறது. இலங்கையின் பிக்குணி சாசனம் ஆரம்பிக்கப்பட்டதும் சங்கமித்தாவின் வருகையுடன் தான். இதன் போது தான் தேவநம்பியதிஸ்ஸனின் சகோதரன் மகாநாகனின் மனைவி அனுலா தேவியும் அவருடன் 500 பெரும் பிக்குணிகளாக ஆனார்கள். இலங்கையின் முதலாவது பிக்குணி அனுலா தேவி.

புனித வெள்ளரசு மரம் கி.மு 249 இல் தேவநம்பியதிஸ்ஸனால் நடப்பட்டதாக இலங்கையின் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மனிதனால் நடப்பட்டதும், அவ்வாறு நடப்பட்ட காலம் அறியப்பட்டதுமான, மரங்களில், உலகிலேயே மிகப் பழமையான மரம் இதுவென்று கூறப்படுவது வழக்கம்.



புத்தர் ஞானம் பெற்ற வெள்ளரசு மரம் இந்தியாவில் யுத்தத்தால் அழிக்கப்பட்ட நிலையில் பிற்காலத்தில் மீண்டும் இலங்கையில் இருந்து ஒரு கிளை கொண்டு செல்லப்பட்டு நடப்பட்டது. அந்த கிளையே இன்றும் புத்தகயாவில் வணங்கப்படுகிறது என்பது இன்னொரு கிளைக்கதை.

மியன்மார், தாய்லாந்து உட்பட மேலும் சில நாடுகளுக்கு ஸ்ரீமாபோதியின் கிளைகள் அனுப்பட்டுள்ளன எனவும் தெரியவருகின்றது.

வெள்ளரசு மரம் புனிதமானது என்பதை இந்துக்களும் ஏற்கின்றனர். ஆனால் இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் பகுதிகளில் ஆக்கிரமிப்பு கருவியாக அது பயன்படுத்தப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். எங்காவது ஓர் இடத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டு, அங்கு வெள்ளரசு மரக்கன்று நடும் நடைமுறையும் காணப்படுகின்றது.


## ஆஸ்திரேலியாவில் போதி மரம்

ஆஸ்திரேலிய விகாரையில் நாட்டுவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள - புத்தர் ஞானம் பெற்ற 2500 வருடங்கள் பழமைவாய்ந்த போதிமரத்திலிருந்து எடுக்கப்பட்ட - புனித கிளை 12 மாத கால உயிரியல் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்துகொண்டு அடுத்த வருடம் மே மாதம் விக்டோரியா பெண்டிகோ பகுதியில் அமைந்துள்ள விகாரையிடம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுராதபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள இந்த புனித மரத்தின் கிளையானது விக்டோரியாவில் பெண்டிகோ பிரதேசத்தில் அமைந்துள்ள போதி வம்ம விகாரையில் நாட்டப்படவுள்ளது.

ஆஸ்திரேலிய உயிரியல் சட்டவிதிகளின் பிரகாரம் ஒரு வருடத்துக்கு தனிமைப் படுத்தப்பட்டு பேணப்படவுள்ள இந்த மரக்கிளையில், கிருமித்தொற்று எதுவும் தொற்றிக்கொள்ளாமல், வாரமொருமுறை விசேட சோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாங்கள் யார் போர் பெற்ற பிள்ளைகள்





கருணாகரன்

பால்ராஜ் பெரிய தளபதியா? நல்ல சண்டைக்காரரா? அவருக்கு போர் என்றால் பிடிக்குமா? போர் செய்யப் பயமில்லையா?" என்று கேட்டான் எங்களோடிருக்கும் பானு.

பானுவுக்கு இப்பொழுது பதினேழு வயது. யுத்த காலத்தில், யுத்தச் சூழலில் பிறந்து வளர்ந்தவன். தந்தை விடுதலைப் புலிகள் அமைப்பில் இருபது ஆண்டுகளுக்கு மேல் போராளியாக இருந்தவர். பெரியதொரு போர் வீரர். போரில் வலது கால் சிதைந்து மூன்று அங்குலம் குறைந்து விட்டது. நடக்கும்போது ஒரு பெரியதொரு கெந்தல். எப்போதும் ஒரு காலை இழுத்திழுத்துத்தான் நடப்பார்.

போர் முடிந்த பிறகு எல்லாமே தலை கீழாகி விட்டன. புனர்வாழ்வளிக்கப்பட்டு இப்பொழுது அந்தக் கெந்தற் காலுடன் தினச் சம்பளத்துக்கு வீதிப் புனரமைப்புப் பகுதியில் வேலை செய்கிறார். வேறு வழியில்லை. இப்ப போய் அந்தப் போர்க் கதைகளையும் போர்த்திறனையும் யாரிடம் சொல்ல முடியும்? அதற்கு என்னதான் மதிப்புண்டு?

புலிகள் இயக்கத்தில் உறுப்பினர் என்றால் 99 வீதமும் போர் வீரர்களாகத்தான் இருப்பார்கள். விலக்குகள் உண்டு. அது அபூர்வம். அன்ரன் பாலசிங்கம், பொன் தியாகம், அன்பரசு போன்ற சிலர் மட்டுமே இந்த அபூர்வ விலக்குகளில் சேர்த்தி. மற்றும்படி மற்றவர்களெல்லாம் களம் கண்டவர்களே. காயப்பட்டவர்களே. அதாவது விழுப்புண் ஏற்றவர்களே!

யுத்தச் சூழலில், விடுதலைப் புலிப் போராளி (போர் வீரர்) ஒருவரின் மகனாகப் பானு பிறந்திருந்தாலும் இன்று அவனுக்குப் புலிகளைப் பற்றிய செய்திகளும் போர் பற்றிய கதைகளும் புதியவையே. யுத்தம் நடந்த காலத்தில் அவன் ஐந்து வயதுப் பையன். எதையும் சரியாக நினைவில் வைத்துக்கொள்ளவோ ஒவ்வொன்றையும் பகுத்துப் பார்த்துப் புரிந்து கொள்ளவோ கூடிய வயதில்லை அது. ஆனால் இப்பொழுது மங்கிய பழைய ஓவியத்தை அல்லது மங்கிய புகைப்படத்தைப் பார்ப்பதைப்போல அந்த நினைவுகள் அவனிடம் மேலெழுந்து வருகின்றன. அவை கேள்விகளை எழுப்புகின்றன.

உண்மைதான். புலிகளின் போர்க் கதைகளும் அவர்களுடைய போர்க்கலையும் வியப்பூட்டுவன. பானுவுக்கு மட்டுமல்ல, பலருக்குமே. புலிகளை எதிர்ப்போருக்கும் அவர்களைக் கடுமையாக விமர்சிப்போருக்கும் கூட ஆச்சரியமான இந்த உள் விருப்புண்டு.

இதற்குக் காரணம் புலிகளைத் தவிர, பல நூற்றாண்டுகளுக்கு மேல் ஒழுங்கமைக்கப்பட்ட போரியல் வரலாறும் போரை நடத்திய போராளுமைகளும் நம்மிடம் இல்லை என்பதேயாகும்.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ப்பரப்பின் உண்மை நிலை இதுவே. இதற்குள் வீரபாண்டிய கட்டப்பொம்மன், பண்டார வன்னியன் போன்ற சில போர் வீரர்களும் சிறிய அளவிலான அவர்களுடைய எதிர்ப்பு முனைப்புகளும் இருந்தாலும் அவை எதுவும் முழு அளவில் ஒழுங்கமைக்கப்பட்ட போராகவும் போர்க்கலையாகவும் இருக்கவில்லை. அதற்கு முன்னர் சோழப் பேரசு உள்ளிட்ட மன்னராட்சிக் காலப் படைநடவடிக்கைகளும் புனைவில் விபரிக்கப்பட்டுள்ளனவே தவிர, போரியல் நூல்களாகவோ ஆய்வுகளாகவோ இல்லை.

விலக்காக 400 ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழப் போராளிகளே ஆயுதம் ஏந்தியிருக்கிறார்கள். லெபான், இந்தியா, இலங்கை எனப் பல இடங்களிலும் முறையான இராணுவப் பயற்சியைப் பெற்றவர்கள். அவர்களே போரையும் நடத்தியிருக்கிறார்கள். அதிலும் கிட்டிய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நவீன போர் அது. ஆகவே நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஈழப்போராளிகளே போர் வீரர்களாகவும் நினைத்த மாத்திரத்தில் எதையும் செய்யக் கூடிய அதிவல்லமை உடையோராகவும் சாகஸக்காரராகவும் இருந்துள்ளனர்.

போர் என்பதே அதிவல்லமையும் சாகஸமும் இணைந்த ஒன்றுதான். இதனால்தான் அதற்கு எப்போதுமே பெரியளவிலான ஈர்ப்புண்டு. அது இதிகாசங்களில் கூறப்படும் போராக இருந்தாலும் சரி, வரலாற்றுப் போர்களாக, உலகப் போர்களாக, விடுதலைப் போர்களாக இருந்தாலும் சரி அவற்றின் மீது பலருக்கும் ஈர்ப்பு ஏற்படுவதற்குக் காரணமே இதுதான். போர் வெறுப்பாளர்கள், எதிர்ப்பாளர்களைக் கூட ஒரு கணம் தடுமாற வைத்து விடும் இந்த அதிவல்லமைகளும் சாகஸத்தன்மைகளும்.

இந்த அடிப்படையில்தான் ஈழப்போருக்கும் அதைப் பெருமெடுப்பில் நடத்திய புலிகளுக்கும் தமிழ்ப்பரப்பில் பெரும் மதிப்பும் ஈர்ப்பும் உள்ளது. ஈழப் போராட்டமும் போரும் புலிகளும் தோல்வியைக் கண்டாலும் அதை மீறியும் பலரிடத்திலும் இந்த ஈர்ப்பிருப்பதைக் காணலாம். இதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேணுமென்றால்,

வீரபாண்டிய கட்டப்பொம்மன், பண்டாரவன்னியன், சங்கிலியன் போன்றோர் தங்களுடைய எதிர்ப்பிலே - போரிலே வெற்றியடையவில்லை. ஆனாலும் இவர்களைத் தமிழுலகம் அளவுக்கதிகமாகக் கொண்டாடுகிறது. வீரர்களாகப் போற்றுகிறது. இலக்கியப் பிரதிகள், நாடகம், சினிமா என்ற பிற கலை வெளிப்பாடுகள் மற்றும் சிலைகளை வைத்துப் போற்றுதல் எனப் பல வகையில் இந்தக் கொண்டாட்டத்தைப் பார்க்கலாம். இதற்குக் காரணம், தோற்றுப் போனாலும் ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறைக்கும் எதிர்ப்பாளர்களாக இவர்கள் இருந்திருக்கிறார்கள். சிறிய அளவிலேனும் போரிட்டிருக்கிறார்கள் என்பதே. முக்கியமாகப் போரிட்டிருக்கிறார்கள் என்பதாகும்.

இவ்வாறுதான் புலிகளின் தோல்வியையும் ஈழப்போராட்டத்தின் வீழ்ச்சியையும் விட அந்தப் போரும் அதில் அவ்வப்போது ஈட்டப்பட்ட (ஓயாத அலைகள், தீச்சுவாலை, நடவடிக்கைகள், ஆனையிறவு மீட்பு, அனுராதபுரம், கட்டுநாயக்க விமானத்தளத் தாக்குதல்கள் போன்ற பெரும்) வெற்றிகளும் உண்டாக்கிய பெருமிதங்கள் ஈர்ப்புக்குரியனவாக உள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

# நாங்கள் யார்/போர் பெற்ற பிள்ளைகள்


மாமன்னர் இராஜராஜசோழன்

**ஈழப்போராட்டத்தின் தொடக்கத்திலேயே புலிகளிடம் இருந்த இந்த இராணுவத்தன்மையும் முதன்மைப்பாடுமே அவர்களை ஏனைய இயக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. முக்கியமாக 1983 யாழ்ப்பாணம் - திருநெல் வேலியில் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதல். இதனால் அரசியற் செயற் பாடுகளையும் விட ஆயுத நடவடிக்கைகளே ஈழப்போராட்டத்தில் முதன்மை பெற்றன. மக்களிடத்திற் காணப்பட்ட எதிர்பார்ப்பும் ஈடுபாடும் கூட ஆயுதம் மற்றும் தாக்குதல் போன்றவற்றிலேயே குவிந்திருந்தது.**

**(09ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல முடியும். புலிகள் இருந்த காலத்தில் எழுதப்பட்ட ஆக்கங்கள், (நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் அரசியல்) பிரதிகளை விடவும் அவர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் எழுதப்பட்ட ஆக்கங்களும் பிரதிகளும் அதிகளவாக இருக்கின்றன. இப்பொழுதுதான் அவர்களைப் பற்றிப் பேசப்படுவதும் அதிகமாக உள்ளது. அந்தளவுக்கு உலகெங்கும் உள்ள தமிழர்களிற் பெரும்பாலானோர் இன்னும் புலிகளின் மீது பேரபிமானமும் (போரபிமானமும்) உள்ளோராகவே உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை புலிகள் தோற்கவில்லை. பதிலாகத் தோற்கடிக்கப்பட்டனர் என்பதேயாகும்.

தோற்றதும் தோற்கடிக்கப்பட்டதும் என்ற இந்த இரண்டும் ஒன்றுதானே என நீங்கள் கேட்கலாம். ஆனால் இந்த இரண்டு சொற்களுக்கும் இடையில் நுட்பமான வேறுபாடுண்டு என இவர்கள் எண்ணுகிறார்கள். தோற்கவில்லை என்பது, புலிகளிடத்தில் உள்ள தவறுகள், பலவீனங்களால் தோற்றுப்போனதாகக் கொள்ளப்படும். மாறாகத் தோற்கடிக்கப்பட்டது என்பது என்னதான் திறமையும் ஆற்றலும் வலுவும் வல்லமையும் இருந்தாலும் அதை மிஞ்சிய சக்திகளாலும் பலத்தினாலும் தோற்கடிக்கப்பட்டது எனக் கொள்ளப்படுகிறது. இதனால்தான் “40 நாடுகள் சேர்ந்து தொடுத்த யுத்தம் அது. வல்லரசுகள் திரைமறைவில் நடத்திய சதி. இலங்கை அரசு மட்டும் அந்த யுத்தத்தை நடத்தியிருக்குமானால் அது நிச்சயமாகத் தோல்வியைத் தழுவியிருக்கும்” என்று இவர்கள் சொல்கிறார்கள்.

உண்மைதான், புலிகளின் போர் மிக நூதனமான பல உள்ளடக்கங்களைக் கொண்டது. கெரில்லாத் தாக்குதல் என்ற மறைந்திருந்து தாக்கும் நடவடிக்கையிலிருந்து மரபுப் படையாக நேருக்கு நேர் நின்று போரிடுவது வரை இது பல வடிவங்களைக்கொண்டது. இதற்கான பயிற்சியையும் படைக் கட்டமைப்புகளையும் தகுதியான ஆயுதங்கள் மற்றும் ஆளணியையும் அவர்கள் கொண்டிருந்தனர். தேவைப்படுமிடங்களில் பொருத்தமான முறையில் மிக உச்சமாகப் போரிடும் நுட்பத்தையும் பெற்றிருந்தனர். இது அவர்களிடம் சிறப்பானதொரு இராணுவத் தன்மையையும் இராணுவத் தந்திரோபாயத்தையும் உள்ளடக்கமாகக் கொண்டதாக அமைந்தது. முக்கியமாக இராணுவப் புலனாய்வு, வேவு போன்றவற்றுக்கான கட்டமைப்புகள் சிறப்பான முறையில் இயங்கின. மேலும் கண்ணி வெடிகள், மிதி வெடிகள், பொறி வெடிகள், கிளேமோர் தாக்குதல்கள் என எதிரியைத் திணறடிக்க வைக்கும் தாக்குதல்களும் ஏராளமாக இருந்தன. இதற்கப்பால் தரைப்படை, கடற்படை, விமானப் படை என்று போரியல் அடிப்படைக்குத் தேவையான மூன்று படைக் கட்டமைப்புகளையும் புலிகள் கொண்டிருந்தனர்.

நவீனத்தமிழ்ப்பரப்பில் இத்தகைய இராணுவக் கட்டமைப்பையும் போரிடும் ஆற்றலையும் தனியாகக் கொண்ட வேறு அடையாளங்கள், கட்டமைப்புகள் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் விட எல்லோரையும் அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஆழ்த்தும் கரும்புலிகள் என்ற தற்கொலைத் தாக்குதல்களும் அதற்கான கட்டமைப்பும் தனியாக - சிறப்பாக இருந்தது.

இவை அனைத்தும் இணைந்து திரட்சியடைந்த போர் வடிவத்தையே புலிகள் மேற்கொண்டனர். அல்லது தமது இலக்கை அடைவதற்காக இவற்றை அவர்கள் பயன்படுத்தினர். அல்லது ஆக்கிரமிப்புக்கு எதிரான தமது எதிர்ப்புக்கு இவற்றைக் கையாண்டனர். இவற்றின் மூலம் முப்பது ஆண்டுகளாக முன்னேற்றகரமான வெற்றிகளைப் பெற்றும் வந்தனர். இது தமிழரின் வரலாற்றில் புலிகளை மிகப் பிரமாண்டமானதொரு இராணுவ வல்லமைச் சக்தியென அடையாளப்படுத்தியது. இதைப்பற்றிய பல்வேறு ஆய்வுகளும் பார்வைகளும் இராணுவவியல் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுசன ஊடகப் பரப்பில் இராணுவத்துறை ஆய்வாளர்களான இக்பால் அத்தாஸ், தராகி சிவராம், கேணல் ஹரிகரன் உள்ளிட்ட பலர் இதைச் செய்தனர்.


மாவீரன் பண்டாரவன்னியன்

ஈழப்போராட்டத்தின் தொடக்கத்திலேயே புலிகளிடம் இருந்த இந்த இராணுவத்தன்மையும் முதன்மைப்பாடுமே அவர்களை ஏனைய இயக்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டியது. முக்கியமாக 1983 யாழ்ப்பாணம் - திருநெல்வேலியில் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதல். இதனால் அரசியற் செயற்பாடுகளையும் விட ஆயுத நடவடிக்கைகளே ஈழப்போராட்டத்தில் முதன்மை பெற்றன. மக்களிடத்திற் காணப்பட்ட எதிர்பார்ப்பும் ஈடுபாடும் கூட ஆயுதம் மற்றும் தாக்குதல் போன்றவற்றிலேயே குவிந்திருந்தது.

இது உண்டாக்கிய பெருமிதமும் கவர்ச்சியும் ஈழத்தில் மட்டுமல்ல, தமிழகத்திலும் பிரதிபலித்தது. ஏனைய அரசியல் வழி இயக்கங்களையும் விட விடுதலைப் புலிகளின் மீதும் அதன் தலைவர் பிரபாகரன் மீதும் பலருக்கும் ஈர்ப்பு உண்டாக்கியது. புலிகளையும் பிரபாகரனையும் போற்றிப் பாடத் தொடங்கினர். இது வளர்ந்து பின்னாளில் போரியல் ரீதியாக புலிகளின் இராணுவத் தந்திரோபாயமும் இராணுவப் பொறிமுறையும் தனியாக ஆய்வுப் பொருளாகியது.

ஆகவே எல்லாவற்றுக்கும் அப்பால், போரின் ஈடுபாடே பலரிடத்திலும் உள்ளுறைந்திருப்பதைக் காணமுடிகிறது. அவர்கள் அறிந்தும் அறியாமலும் இது சங்க காலத்திலிருந்து இன்றுவரையில் தொடரும் ஒரு உளவியல் அம்சமாகும். புறநானூற்று வீரத்தைப் போற்றுவதும் வீரர்களுக்கான நடுகல் வழிபாட்டைச் சிறப்பாக உணர்வதும் அதை இன்றைய மாவீரர்களாக மீளுருவாக்கம் செய்வதும் இந்த உளவியலின் தொடர்ச்சியே. சோழப் பேரரசைத் தமிழர்கள் பெருமையோடு நினைவிற் கொள்வதன் அடியில் உள்ளதும் இந்தப் போர் வெற்றியின் விளைவுகளே.

போரின் ஒரு பக்கம் இழப்புகளையும் மிகப் பெரிய அவலத்தையும் துயரையும் தருவதாக இருந்தாலும் அதன் மறுபக்கம் களிப்பூட்டுவதே.


இதுவே பானுவிற்குள்ளும் இயங்கிக் கொண்டிருக்கிறது. தன் தந்தையின் கால் பற்றிய அக்கறையையும் விட, அவருடைய இன்றைய கடினமான வாழ்க்கைப்பாடுகளையும் விட அவனுக்கு ஈர்ப்பாக இருப்பது பால்ராஜ் போன்ற தளபதிகளைப் பற்றி அறிவதும் புலிகளின் போர்த்திறன் பற்றித் தேடுவதுமாகும்.

வேட்டையாடும் உயிரியல்பின் ஈர்ப்பு விதி இது எனலாமா?

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ஜெனிவாத் திருவிழாவும் இலங்கையின் நாடகமும்



ஊரில் திருவிழா என்றால் வீடுகளுக்கு வெள்ளையடிப்போம், குறிப்பிட்ட காலத்திற்கு பராமரிப்போம் பின்னர் அதனை கைவிட்டு விடுவோம். பின்னர் அடுத்த வருடம் திருவிழா வரும்போது மீண்டும் வீட்டுக்கு வெள்ளையடிப்போம்" - இந்த உதாரணம் யாருக்கு பொருந்துகிறதோ இல்லையோ இலங்கையில் தற்போது அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கத்திற்கு 100 வீதம் பொருந்தும்.

ஜெனீவாத் திருவிழா ஆரம்பமாகும் போதெல்லாம், அதனை அண்மித்த நாட்களில் மனித உரிமைகள், அரசியல் தீர்வு விடயங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களை தூசி தட்டி வெள்ளையடிக்கும் செயற்பாட்டை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துவிடும். எதிர்வரும் 13ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஒகஸ்ட் 25ஆம் திகதி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுதலை செய்வது அல்லது பிணை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வதற்காக ஆலோசகர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

நீண்ட காலமாக ஆலோசகர் குழுவொன்று நியமிக்கப்படாமையால், தங்களின் உரிமைகள் தொடர்பான விடயங்களை முன்வைப்பதற்கு கைதிகளுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்திருந்தது. அவ்வாறெனின் அரசாங்கம் இத்தனைக்காலமும் "வேற்று கிரகத்தில்" ஆட்சி செய்ததா? என அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது மாத்திரமல்ல கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் புதிய அரசியலமைப்பு வரைவை உருவாக்குவதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஸ் டி சில்வா தலைமையிலான 9 பேர் அடங்கிய குழு அமைச்சரவை நியமித்திருந்தது. இந்த விடயமானது மனித உரிமைகள் பேரவையின் 45ஆவது கூட்டத்தொடர் (செப்டெம்பர் 14 - ஒக்டோபர் 07) ஆரம்பமாவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாக இடம் பெற்றிருந்தது. இது தொடர்பிலும் அப்போது பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இது மாத்திரமல்ல, இவ்வாறு பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் போதெல்லாம் ஏதாவது ஒரு நாடகத்தை நடத்தி பின்னர் அதுத் தொடர்பில் எவ்வித முன்னேற்பாடான விடயங்களையும் செய்யாமல் கிடப்பில் போடுவதும், சர்வதேசத்திற்கு இணக்கம் வெளியிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பதிலாக அதற்கு முரணான செயற்பாடுகளை மேற்கொள்வதும் ஒன்றும் இலங்கை அரசாங்கத்தின் அரிதான செயற்பாடு அல்ல, மாறாக இது வழமையான ஒரு செயற்பாடாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நீதித்துறை மீதான தாக்குதல்கள் தற்போதும், எதிர்காலத்திலும் மனித உரிமை மீறல்களின் அபாயத்தை அதிகரிப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த வருட ஆரம்பத்தில் தெரிவித்திருந்தது.

புதிய அரசாங்கம் கடந்த 2019ஆம் ஆண்டில் ஜனநாயக ரீதியாக ஆட்சியதிகார்த்தை கைப்பற்றியிருந்தபோதிலும், பொறுப்புக்கூறலை வழங்குவதற்கான முயற்சிகள் கணிசமாகக் குறைவினை அவதானிக்க முடிகிறது. அவ்வப்போது நியமிக்கப்படும் ஆணைக்குழுக்கள், விசாரணை குழுக்கள் மற்றும் வாக்குறுதிகளைத் தவிர வேறு எந்த முன்னேற்றகரமான முயற்சிகளையும் அவதானிக்க முடியவில்லை.

யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் தீக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் என பலவும் அடையாளப் படுத்தப்பட்டாலும், மிக முக்கியமாக வடக்கில் பாதுகாப்புத் தரப்பு வசம் காணப்படும் பொதுமக்களின் காணிகளை விடுவித்தல், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், வடக்கு கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை குறைத்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைய அதனை திருத்தியமைத்தல், பொலிஸாரின் அதிகார மீறல் செயற்பாடுகள் (பொலிஸூக்குள் சித்திரவதை மற்றும கொலைகள்) போன்ற பல்வேறு விடயங்களுக்கான தீர்வுகளை உள்ளூர் மக்களும் சர்வதேசமும் எதிர்பார்த்தனர், எனினும் எதுவும் நடக்கவில்லை. வெறுமனே காலம் கடத்தியதே மிச்சம்.

வடக்கு கிழக்கில் இன்று 1,600 நாட்களைக் கடந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர், எனினும் இதுவரையில் அரசாங்கத்தின் உயர்மட்டம் வெறுமனே ஒரு சந்திப்பைக் கூட அவர்களுடன் நடத்தவில்லை. அது மாத்திரமா பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என எதிர்பார்த்த நிலையில், காணிகளில் படையினர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயத்தை அமைச்சர் சமல் ராஜபக்ச நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே ஏற்றுக்கொண்டிருந்தார்.

இவ்வாறான நிலையில் பயங்கரதவாத தடைச்சட்டத்தை மீளமைக்க அல்லது இரத்து செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென எதிர்பார்த்த நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின், பத்தி 27 இன் கீழ் மார்ச் 12ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக, "கடும் அடிப்படைவாத கொள்கைகளிலிருந்து மீட்கும் உத்தரவு" என்ற தலைப்பில் ஒரு விதிமுறை அறிவிக்கப்பட்டது அந்த விதிமுறைகளின் கீழ், எந்தவொரு நீதித்துறை செயன்முறை அல்லது சான்றுகள் இல்லாமல் எவரையும் கைது செய்து புனர்வாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்க முடியும். எனினும் இந்த உத்தரவு அமுல்படுத்தப்படுவதனை தடுக்கும் வகையில் இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்குமாறு ஊடகவியலளார்கள் சிலரும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்திருந்த நிலையில், குறித்த அறிவித்தல் அமுல்படுத்துவதை இடைநிறுத்தும் வகையில்உச்ச நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பித்திருந்தது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இடம்பெற்ற கொலைகள் மற்றும் கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து வெற்றிகரமாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸ் அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர் அல்லது வெளிப்படையாக வேண்டுமென்றே சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக தண்டனை அனுபவிக்கின்றனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு ஆணைக்குழுவும் அவருக்கு நெருக்கமானவர்களும் சம்பந்தப்பட்ட குற்ற வழக்குகளில் தலையிடும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. கட்டாயமாக காணாமல் போனதாகக் குற்றம் சாட்டப்பட்ட இராணுவ மற்றும் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மீதான விசாரணை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன அல்லது தாமதப்படுத்தப்பட்டுள்ளன. 2019இன் இறுதிப்பகுதியில் ஜனாதிபதியாக தெரிவான கோட்டாபய ராஜபக்ச, போர்க்குற்றங்கள் மற்றும் பிற கடுமையான உரிமை மீறல்களுக்கு குறித்த குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ளவர்கள் சிரேஷ்ட நிர்வாக பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். "போர்வீரர்கள்" மீதான தாக்குதல் என்ற போர்வையில் 2015ஆம் ஆண்டு 30இன் கீழ் ஒன்று தீர்மானத்தில் இருந்தும் அரசாங்கம் வெளியேறியுள்ளது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கண்துடைப்பு நாடகங்களை அரங்கேற்றும் கையோடு எதிர்வரும் 13ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் பங்கேற்கத் தயாராகி வருகிறது அரசாங்கம். புதிய வெளிவிவகார அமைச்சராக பதவியேற்றுள்ள ஜீ.எல் பீரிஸ் தலைமையிலான குழு இதில் பங்கேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. "ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் ஒவ்வொரு வருடமும் இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை." என புதிய வெளிவிவகார அமைச்சர் ஏற்கனவே அறிவித்துள்ள நிலையில், கூட்டத்தொடரில் எவ்வாறான ஒரு முன்னெடுப்புகளை மேற்கொள்வார் என சிறு பிள்ளையும் கணித்துவிடும்.

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மாத்திரமல்ல யுத்தத்தின் பின்னர் அதிகாரத்திற்கு வந்த மூன்று அரசாங்கங்களும் ஏதோ ஒரு வகையில் "பொறுப்புக்கூறல்" என்ற விடயத்தை கைவிட்டே செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளன. எனினும் சர்வதேசமும் விட்டப்பாடில்லை தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தாலும், அதற்கு செவிசாய்க்கும் சமிக்ஞைகளை எம்மால் காணமுடியவில்லை. காரணம் சர்வதேசம் "மயில் இறகால்" அரசாங்கத்தை அடிப்பதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு மிக அழுத்தமாக ஏதாவது முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருக்குமானால் இன்றளவில் பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்திருக்கும். எனினும் "செக்கு மாடாக" அதே இடத்தில் ஒரு தசாப்தத்தைத் தாண்டி சுற்றிக்கொண்டிருக்கின்றன பழைய பிரச்சினைகள்.

எதிர்வரும் 13ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகும், சிலவேளை இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி மேற்கத்தேய வல்லரசுகளால் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படலாம். அதனை அரசாங்கம் ஏற்கலாம், சிலவேளை ஏற்காமல் விடலாம். எனினும் எதுவும் நடைபெறப்போவது இல்லை. 49ஆவது கூட்டத்தொடருக்கு முகங்கொடுக்க அரசாங்கம் தயாராகும்.



# வாழு! வாழ விடு மரங்களை!!

இந்தியாவில் பூஞ்சை தொற்று அதிகரிக்கிறது என்று பலர் பயமுறுத்துகிறார்கள், பலர் பயப்படுகிறார்கள். முதலாம் உலகப் போருக்கு முந்தைய காலத்து தேசியக் கொடிகள் சிலவற்றின் நிறங்களான கறுப்பு, வெள்ளை, மஞ்சள் நிறங்களில் இந்தப் பூஞ்சைகள் மக்களிடையே பரவுவதாக பல செய்திகள் வெளியாகின்றன. கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதன் பின் குணமடைந்த நோயாளிகளிடையேதான் இந்தப் பூஞ்சை தொற்று அதிகரித்து வருவதாக சொல்லப்படுகிறது. இது மக்களிடையே அதிகமாகப் பரவுவது முதல் முறை என்பதால் இந்த தொற்றுநோய் பற்றியும் பூஞ்சை பற்றியும் ஏராளமான தவறான கருத்துகளும் பரவி வருகின்றன.

இந்தப் பூஞ்சைகள் ஆரோக்கியமானவருக்கு எந்த விதமான தொற்று நோயையும் ஏற்படுத்தாது என்றாலும் ஏதேனும் உடல் நல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு, பூஞ்சையின் தாக்குதல் உடனடியாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

காய்ச்சல், தோல் புண், மூச்சுத் திணறல், தலைவலி மற்றும் சோர்வு ஆகியவை இந்த பூஞ்சை தொற்றுநோய்களின் அறிகுறிகளாகும். அதனை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டால், மருந்து மூலம் சிகிச்சையளிக்க முடியும். இல்லையென்றால், பாதிக்கப்பட்ட பகுதியை அகற்ற அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும்.

அது சரி, கட்டுரையின் தலைப்பிற்கும் பூஞ்சைக்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கிறீர்களா? வருகிறேன்..... அதற்கு முன் பூஞ்சையைப் பற்றி சற்று அறிந்து கொள்வதற்காக, தற்கால நிகழ்வுகளுடன் அது தொடர்பான விடயங்களுடன் ஆரம்பித்தேன். பூஞ்சை (இலங்கையில் பூஞ்சணம், அல்லது பூசனம்) உயிரியல் பகுப்பில் பங்கசு வகுப்பைச் சேர்ந்தது. பொதுவாக தாவரங்கள் ஒளிச்சேர்க்கை மூலம் தங்கள் சொந்த உணவை உருவாக்குகின்றன.

அதே நேரம், விலங்குகள் தாமாக உணவு உற்பத்தி செய்வதில்லை. வேறு தாவரங்களையோ இல்லை விலங்குகளையோ உண்பதால் அவை உயிர் வாழ்கின்றன. அத்துடன் தாவரங்கள் போல ஒரே இடத்தில் விலங்குகள் நிலை கொள்வதில்லை. இந்த வரைவிலக்கணத்திற்கு விதிவிலக்காக சில பூச்சிகளை உட்கொள்ளும் தாவரங்களும் ஒளிச்சேர்க்கை செய்யும் சில கடல் வாழ் நுண்ணிய விலங்குகளும் உலகில் இருக்கின்றன. ஆனால், பூஞ்சைகள் தாவரங்களுமல்ல விலங்குகளுமல்ல. வகைப்படுத்தலில் அவை இப்போது ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளன. "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்" என்று பாரதி பாடிய போது ஆணுமில்லை-பெண்ணுமில்லை என்ற வகுப்பை அறிந்திருக்கவில்லை என்பது எமக்கு இப்போது வெளிப்படுகிறது. அதைப் போலத்தான் பூஞ்சைகளும் தாவரங்களுமல்ல விலங்குகளுமல்ல. இருந்தாலும் அவை தாவரங்களின் நல்வாழ்விற்கு அளிக்கும் பங்கு, ஒரு தாய் தன் பிள்ளைகளுக்கு செய்யும் கடமைகள் போல, நன்றாக நடந்தால் வெளியே யாருக்கும் தெரியாது .ஆனால் நடக்கவில்லை என்றால் அதைப் பற்றித் தெரியாதவர் யாரும் அந்த சமூகத்தில் இல்லாமல் இருக்க முடியாது.

கடந்த மாத கட்டுரையில், "மரங்களில் இருந்துதான் இந்த ஒக்சிஜன் கிடைக்கிறது என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகில் உற்பத்தியாகும் 70 சதவீதமான ஒக்சிஜன் நீர் நிலைகளின் கரைசல்களில் இருந்து தோன்றுகிறது. இதன் தோற்றத்திற்கு, கடல் சார் மிதவைவாழிகள் (Plankton) மிக முக்கிய பங்காற்றுகின்றன" என்று நான் எழுதியதைப் பார்த்த ஒருவர், "மரங்கள் மீது நான் வைத்திருந்த மதிப்பு அனைத்தையும் நீர் ஒடித்துப் பொடியாக்கி விட்டீர்" என்று ஆதங்கப்பட்டார்.

"அதற்காக மரங்கள் தேவையில்லை என்று நாம் சொல்ல வரவில்லை. மரங்களை விட இந்த நுண்ணுயிர்கள்தான் ஒக்சிஜன் உருவாகுவதற்கு மிக முக்கிய பங்காற்றுகின்றன" என்று நான் எழுதியிருந்ததைக் குறிப்பிட்டேன். ஆனால் அவர் ஒரு தாவரவியல் பட்டதாரி. அவருடைய ஆதங்கத்திற்கு அதுவும் ஒரு காரணம். அத்துடன், மரங்கள்தான் கரியமில வாயுவை உலகிலிருந்து அப்புறப்படுத்துகிறது என்பதையும் சொல்லி வைத்தார்.






கொரோனா வைரஸ் மற்றும் பூஞ்சை என்பன மட்டுமல்ல, இப்படியான சிந்தனைகளும் தொற்றிக் கொண்டால் அவை செய்யும் அட்டகாசம் வடிவேலுவை வைத்து போடப்படும் மீம்ஸ்ஸை விடப் பன்மடங்கு வேகமாகப் பரவ வல்லவை. அதனால் ஒரு தேடுதல் வேட்டையில் ஈடுபட்டேன்.

மரங்களுக்கும் மனம் இருக்கிறது என்று, 1973ஆம் ஆண்டு Peter Tompkins மற்றும் Christopher Bird என்பவர்கள் எழுதிய "The Secret Life of Plants" என்ற தலைப்பிலான நூல், மரங்களுக்கும் உணர்வு இருக்கிறது என்பதை வெளிக் கொணர்ந்து மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

மரங்களுக்கு புலன் உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட உணர்வு இருக்கிறது, தாவரங்கள் எங்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும், தாவரங்களிலிருந்து மின்காந்த அலைகள் உருவாகின்றன, தாவரங்கள் அவை வளரும் சூழலைப் பொறுத்து உருமாற்றம் பெறும், ஒரே அறையில் இருப்பவரை மகிழ்விக்க தாவரங்கள் வளரும், இது போன்ற பல கருத்துகளை அவர்கள் பகிர்ந்திருந்தார்கள்.

மாற்றத்தை ஏற்றுக்கொள்ள மனிதன் விரும்புவதில்லை. இவர்கள் கூறிய கருத்துகள் அப்போதைய மனித சிந்தனைக்குச் சவால் விட்டிருந்தமையால், இவர்கள் எழுதிய நூல் பல்வேறு தரப்பிலும் எள்ளி நகையாடப்பட்டது. விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி இல்லாமல் இவர்கள் கருத்துகளைப் பகிர்ந்துள்ளார்கள் என்பதே எதிர்த்தரப்பினர் பலரும் முன்வைத்த வாதம்.

இந்தத் தேடலில் கிடைத்த இன்னொரு நூல், ஜேர்மனியில் வனத்துறையில் பணிபுரியும் Peter Wohlleben சுமார் ஆறு வருடங்களுக்கு முன் எழுதிய "The Hidden Life of Trees", s நான் முன்னர் கூறிய நூல் ஆய்வின் அடிப்படையில் எழுதப்பட்டதென்றால், இந்த நூல் அநுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது. இரண்டுமே சில ஒத்த கருத்துகளை முன்வைத்துள்ளன.

பெரிய மரங்கள் ஒன்றுடன் ஒன்று தகவல் பரிமாற்றம் செய்கின்றன என்பதையும் விலங்குகள் மற்றும் பூச்சிகளால் ஏதாவது ஆபத்து வருகிறதென்றால் அவற்றின் இலைகள் சில இரசாயன பதார்த்தங்களைக் கசிய விட்டு செய்தி பரிமாறுகின்றன என்று இவர் திட்டவட்டமாகக் கூறுகிறார். அது மட்டுமல்ல, நிலத்துக்கடியில் வேர்கள் ஒரு 'வேர் வலைத்தளத்தை' உருவாக்கி அதன் மூலம் மரத்துக்கு மரம் செய்தி பரிமாறப்படுகிறது என்று கூறுகிறார். நீங்கள் ஒரு பெரிய மரத்தைத் தறித்தாலும் அதன் வேர்கள் நிலத்திலேயே இருந்தால், அது தொடர்ந்தும் உயிர் வாழும் என்றும் அந்த மரத்தின் வாழ்நாளில் தான் கற்றவற்றை மற்றைய மரங்களுக்குச் சொல்லிக்கொண்டிருக்கும் என்றும் அவர் வாதிடுகிறார். இங்கேதான் பூஞ்சைகளின் செயல்பாடு மரங்களுடன் இசைந்து போகின்றன.

வேர்களினூடாகவும், அவை வாழும் மண்ணின் ஊடாகவும் இந்தப் பூஞ்சைகள் மரங்களுடன் ஒத்திசைந்து வாழ்கின்றன என்று அவர் அநுபவத்தில் கண்டிருக்கிறார். ஒரு வகையில், பூஞ்சைகள் ஒட்டுண்ணிகள் போல் வாழ்ந்தாலும், ஒரு மரத்திற்கும் இன்னொரு மரத்திற்கிடையிலும், ஒரு மரத்திற்கும் அது வாழும் மண்ணிற்கிடையிலும், தூது செல்லும் இடைத் தரகர் போல் செயல்படுகின்றன.

இதனைப் போன்ற பல விடயங்களை மேலே சொல்லப்பட்ட நூல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. மேலதிகமாக அறிய விரும்பினால், அந்த நூல்களை இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம். சில விடயங்களை மட்டும் மேலோட்டமாக இந்தக் கட்டுரையில் சொல்லி இருக்கிறேன். எம்மைப் போலவே, மரங்களுக்கும் அதன் முன்னோர் சில விடயங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். எல்லா விதைகளும் வேர் விடுவதில்லை, அதனை உடனே விடுவதும் இல்லை. சில விதைகள் பல ஆண்டுகள் மண்ணுள் புதையுண்டிருந்து சரியான நேரத்தில் மட்டுமே முளை விடுகின்றன. காட்டுத் தீ சில சமயங்களில் விதைகள் முளை விடுவதற்கு வழி செய்கின்றன. புலம் பெயர்ந்து நாம் வேறு நாடுகளில் குடியேறுவது போலவே, மரங்களும் புலம் பெயர்கின்றன. மனிதனால் புலம் பெயர்க்கப்படுவது ஒருவகை, ஆனால் இயற்கையாகவே அவை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் புலம் பெயர்கின்றன. ஆனால், அதற்கு பல நூற்றாண்டுகள் எடுக்கலாம்.

சராசரியாக ஒரு மனிதன் எண்பது முதல் தொண்ணூறு வயது வரைதான் வாழ்கிறான். ஆனால், சில மரங்கள் ஆயிரம் வருடங்களுக்கு மேல் வாழக்கூடியவை. உலகில் மிகவும் மூத்த மரம் என்று, 5 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமையானதும், இப்பொழுதும் உயிருடன் இருக்கும் The Great Basin Bristlecone Pine (தாவரவியல் பெயர் Pinus Longaeva) மரம் கருதப்படுகிறது.




கவல்கணன்

எம் நாட்டில், மேற்கு ஆஸ்திரேலியாவின் Derby என்ற இடத்தில், வாழும் boab எனப்படும் ஒரு ஆலமரம் (தாவரவியல் பெயர் Adansonia gregorii ) சுமார் ஆயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்ந்திருக்கிறது என்று கணிக்கப்பட்டுள்ளது. எனவே மரங்கள் செய்யும் பல வேலைகளுக்கு நீண்ட நாட்கள் எடுக்கின்றன.

### என்ன அவசரம்?


இந்த நூல்களில் தாவரங்கள் குறித்து சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி, நான் முன்னர் குறிப்பிட்ட தாவரவியல் பட்டதாரியிடம் விளக்கம் கேட்க முனைந்தேன். இந்த நூலில் தாவரங்கள் செய்கின்ற பல வேலைகள் அவருக்குப் புதிதாக இருந்தன. ஆனால், புதிராக இருக்கவில்லை. தாவரங்களின் செயற்பாடுகள் அப்படி இருப்பது அவருக்கு ஆச்சர்யம் அளிக்கவில்லை என்றாலும் தனது கல்வியில் தாவரங்கள் குறித்த பார்வை மனிதனை மையப்படுத்தி இருந்தமையால் தாவரங்களுக்கு உணர்வு இருக்கிறது என்பதோ, அவை காலநிலை மாற்றத்தைக் கருத்தில் கொண்டு தமது நடவடிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்பதோ கணக்கில் கொள்ளப்படுவதில்லை என்றார்.

இந்த உலகில் பெண்களை அடிமைகள் போல் நடத்தி வந்த ஆண்கள், பெண்களுக்கு சம உரிமை கொடுத்து நடத்துவது போல, விலங்குகளுக்கும் மற்றைய உயிரினங்களுக்கும் நாம் வாழும் உலகில் உரிமைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்திருப்பதைப் போல, மரங்களுக்கும் மனங்கள் இருக்கின்றன, அவையும் மதிக்கப்பட வேண்டியவை என்பதை மனிதன் உணரும் நாள் எதிர்காலத்தில் வரும்.




அதற்கிடையில், எமக்கு வாழ்வளிக்கும் மரங்களுக்கு நாம் மரியாதை கொடுக்கிறோமா என்ற கேள்வியை நாம் எல்லோரும் கேட்க ஆரம்பிக்க வேண்டும்.

அண்மையில், விக்டோரிய மாநிலத்தின் நெடுஞ்சாலைத் துறை பூர்வீக மக்கள் போற்றிப் பாதுகாக்கும் சில மரங்களை வெட்டித் தரைமட்டமாக்கினார்கள். மேலும் சில மரங்கள் மீது அவர்கள் கை வைக்கும் முன்னர், போராட்டம் ஆரம்பமாகி, ஃபெடரல் நீதி மன்றம் வரை சென்று, அந்த மரங்களைத் தறிக்கக் கூடாது என்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கு விக்டோரிய நெடுஞ்சாலையை விரிவுபடுத்தும் திட்டத்தில், பல மரங்கள் வெட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதில் ஆறு மரங்கள், Djab Wurrung பூர்வீக மக்களின் கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்த மரங்கள். பல நூற்றாண்டுகளாக இம் மண்ணில் வாழ்ந்த மரங்கள். இந்த முடிவை மாநில அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தொடர்ந்து போராடுகிறது. மரங்களைத் தறிக்காமல் சாலை அமைக்க முடியாதா?



மனிதன் மனதில் மாற்றம் வர வேண்டும். மரங்கள் ஏன் முக்கியம் என்பதை நாம் உணர வேண்டும். அதற்கு, மனிதனை முதன்மைப்படுத்திய செயல்பாடுகள் அனைத்தும் மாற்றப்பட வேண்டும். அது நாம் ஒவ்வொருவரிடமும் இருந்துதான் பிறக்க வேண்டும். ■

# முடக்கத்தில் பெரு நகரங்கள் தடுமாறும் வணிகங்கள்

● **பொன்ராஜ் தங்கமணி**

ஆஸ்திரேலியாவில் முதன் முதலில் கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தப்பட்ட நாள் 25 ஜனவரி 2020. சீனாவின் வுஹானில் இருந்து விக்டோரியா மாநிலத்திற்கு திரும்பியவரே கொரோனா அறிகுறியுடன் அடையாளப்படுத்தப்பட்டவர் என்பது அனைவரும் அறிந்ததே. சுமார்20 மாதங்களாக கொரோனா மாறிமாறி ஆஸ்திரேலியாவை தனது கட்டுப்பட்டுக்குள் வைத்துள்ளது. 23 ஆகஸ்ட் 2021 நிலவரப்படி, ஆஸ்திரேலியாவில் 45 ஆயிரத்து 750 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில், 25 அயிரத்து 486 மீண்டுள்ளனர். அத்துடன் 984 பேர் இறந்துள்ளனர்.

நம்மில் பெரும்பாலானவர்களுக்கு இது வெறும் எண்ணிக்கையாகும். ஆனால் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அது மிகப் பெரும். இழப்பாகும். இந்த இறப்பு ஒவ்வொரு

கொரோனா வைரஸை முற்றிலுமாக அழிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பெரும்பாலான நாடுகள் அதை ஒடுக்குவதில் கவனம் செலுத்தின. ஆஸ்திரேலிய அரசு இதை உணர்ந்து கொண்டாலும் அவர்கள் தொடர்பு தடம் அறிதல் மூலம் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கிறார்கள். இந்த முறையை உலகில் வேறு எந்த நாடுகளும் தொடர்ந்து செய்கிறதா என்பதை அறிய முடியவில்லை. ஆரம்ப காலகட்டத்தில் மேற்கத்திய நாடுகள் இதில் கவனம் செலுத்தினாலும் ஒரு சில மாதங்கள் சென்றவுடன் இந்த தொடர்பு தடம் அறிதல் முயற்சி வெற்றி பெறாது என்பதை உணர்ந்து அவர்கள் அதை கைவிட்டார்கள். ஆஸ்திரேலியாவில் இம்முறையை இன்றளவும் தொடர்கிறது. கடந்த முறை, இந்த முயற்சி இங்கு வெற்றி அளித்தது என்பதுவே அதற்கான காரணம்.

உள்ளவர்கள் மட்டும் ஓரளவுக்கு நிலைமையை கட்டுக்குள் வைத்துக் கொண்டார்கள். மற்றவர்கள் அனைவரும் அரசை சார்ந்து இருக்க வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டார்கள். அரசுகள் தங்களால் இயன்ற பண உதவியை பல்வேறு திட்டங்கள் மூலம் மக்களுக்கு பகிர்ந்தளிக்க தொடங்கினார்கள். இந்தப் பண உதவி மக்களை வறுமையில் செல்லாமல் இருப்பதற்கு உதவி செய்தது. ஆனால் இந்தப் பணத்தை வைத்து மட்டும் தொழிலை தொடர்ந்து நடத்தும் சூழ்நிலையில் பல்வேறு தொழில்கள் இல்லை என்பதுதான் உண்மை நிலவரம்.

தொழில் நடக்காதபோது தொழிலாளர்களை




குடும்பத்திலும் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பதை வார்த்தைகளால் எளிதில் விவரிக்க முடியாது. இவ்வாறான சூழ்நிலையில் கொரோனா அடிக்கடி உருமாறி, உருமாறி உலகை அச்சுறுத்தி வருகின்றது. அந்தவகையில் டெல்டாவாக உருமாறிய வைரஸ் ஆஸ்திரேலியா முழுவதும் பரவி வருகிறது.

ஒவ்வொரு நாளும் ஒற்றை எண்ணிக்கையிலும் இரட்டை எண்ணிக்கையிலும் இருந்த தொகை தற்போது ஒரு மாநிலத்தில் ஆயிரம் எண்ணிக்கை என்கிற அளவிற்கு உயர்ந்துள்ளது.

பல மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது ஆஸ்திரேலியாவில் கொரோனாவை கட்டுப்படுத்திய விதம் முதலில் பாராட்டப்பட்டது. ஆனால் அந்தச் சூழ்நிலை இன்று மாறிவிட்டது. இதற்கு காரணம் டெல்டா கொரோனா வைரஸ். டெல்டா கொரோனா வைரஸின் தாக்கம் வேகமாகப் பரவ ஆரம்பித்தவுடன், ஆஸ்திரேலியாவால் முன்னர் போல அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை என்பது தான் உண்மை. ஆஸ்திரேலியாவை முன்பு பாராட்டிய அதே நாடுகள் தற்போது சமூக ஊடகங்களில் எள்ளி நகையாடுவதும் நடக்கிறது.

தடுப்பூசி செலுத்துவதில் மிகுந்த தாமதத்தை ஆஸ்திரேலிய அரசு முதலில் ஏற்படுத்தியது. அதன் காரணமாக நீடித்த முடக்கத்தை அனைத்து மாநிலங்களிலும் செயல்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக முடக்கம் அமலில் உள்ளது. இன்னும் ஒரு மாதத்திற்கு மேல் இந்த முடக்கம் தொடர இருக்கிறது. ஒருபுறம் கொரோனா எண்ணிக்கை அதிகரிக்க மறுபுறம் சமூக விலங்கான மனிதன் அறைக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறான். இந்த முடக்கம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் குறிப்பாக மனநலம் சம்பந்தப்பட்ட விசயங்களில் ஏற்படுத்தும் பாரிய விளைவுகள் என்னென்ன என்பதை அளவிட்டுக் கூற முடியாதது வேதனை. வீட்டுக்குளேயே முடங்கி கிடப்பதால், குடும்ப வன்முறை அதிகரித்து உள்ளதைப் பற்றி பல செய்திகள் வந்து கொண்டு உள்ளன.

இந்த முடக்கம் கலைத்துறை, கல்வித்துறை, விளையாட்டுத்துறை, வணிகம், சுற்றுலா, போக்குவரத்து என அனைத்து துறைகளையும் நேரடியாக பாதித்தது. வீட்டிலிருந்து வேலை செய்யலாம் என வாய்ப்பு

வேலையில் வைத்திருப்பது முதலாளிகளுக்கு மிகவும் இக்கட்டான நிலை. அரசின் பொருளாதார உதவி திட்டங்கள் இருந்தாலும், தங்கள் சொந்தப் பணத்தையும் இழந்து கொண்டே இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருப்பதால், ஓரளவிற்கு மேல் பணியாளர்களை வேலை நீக்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இவ்வாறாக வேலை இழந்தவர்களின் எண்ணிக்கை என்பது மிக அதிகம்.

இந்தக் கொரோனாவின் தாக்குதலால் வணிக ரீதியாக பாதிப்பு அடைந்த நிறுவனங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. இது சார்ந்த தகவலும் கருத்துக் கணிப்புகளும் பல்வேறு தளங்களில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவை அனைத்திலும் ஒரு முக்கிய விசயம் என்னவெனில் நிறுவனங்களின் லாபம் குறைந்தது என்பதைத் தாண்டி, அவர்களின் அடிப்படை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சிரமப்பட வேண்டிய சூழ்நிலையில் உள்ளதை நிறுவனங்களின் நிதி நிலைமை காட்டுகிறது. தற்போது உள்ள முடக்கத்தின் பாதிப்புகள் வரும் மாதங்களில் தான் தெரியவரும்.


**(15ஆம் பக்கம் பார்க்க)**

# முடக்கத்தில் பெரு நகரங்கள் தடுமாறும் வணிகங்கள்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சூழ்நிலையில் கடந்த வருடம் எடுக்கப்பட்ட ஆய்வின் அடிப்படையில் உள்ள தகவல்களை இங்கு தருகிறோம்.

**Figure 10: Changes in revenue relative to the same period last year, June 2020**




கல்வி மற்றும் பயிற்சித் துறையில் 87 சதவீத நிறுவனங்கள் தங்களுடைய வருவாய் 2020 ஆம் ஆண்டு குறைந்துள்ளதாகவும் சென்ட் 9வீத நிறுவனங்கள் எந்தவித மாற்றங்கள் இல்லை என்றும் 4 சதவீதம் வருவாய் அதிகரித்து உள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

தங்குமிடம் மற்றும் உணவுத் துறையில் 84 சத வீதம் வீழ்ச்சியும் 6 வீதம் உயர்வு அடைந்திருப்பதாகவும் 10 வீதம் மாற்றம் இல்லாமலும் இருப்பதாக தெரிவித்துள்ளனர். தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்புத் துறையில் 80 சதவீதம் வீழ்ச்சி அடைந்து இருப்பதாகவும் ஒரு சதவீதம் உயர்ந்து இருப்பதாகவும் 19 வீதம் மாற்றமில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கலைத்துறையில் 78 வீதம் வீழ்ச்சி அடைந்து இருப்பதாகவும் 4 வீதம் உயர்ந்திருப்பதாகவும் 18 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். உற்பத்தி துறையில் 74 சதவீதம் வீழ்ச்சி அடைந்து இருப்பதாகவும் 8 சதவீதம் உயர்ந்து இருப்பதாகவும் 18 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். போக்குவரத்து, தபால்துறைகளில் 74 வீதம் வீழ்ச்சியும் 11 வீதம் உயர்வும் 15 சதவீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

நிர்வாகத்துறையில் 78 வீதம் வீழ்ச்சியும் 6 வீதம் உயர்வும் 16 வீதம் மாற்றமில்லை எனவும் தெரிவித்துள்ளனர். வீடுகள், வாடகை துறையில் 71 வீதம் வீழ்ச்சியும் 29 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். உடல்நிலை மற்றும் சமூக நலத் துறையில் 69 வீதம் வீழ்ச்சியும் ஒரு சதவீதம் உயர்வும் 30 சதவீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். சில்லறை வணிகத்தில் 65 வீதம் வீழ்ச்சியும் 20 வீதம் ஏற்றமும் 15 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். கட்டுமானத்துறையில் 56 வீதம் வீழ்ச்சியும் 13 வீதம் முன்னேற்றமும் 31 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத் துறையில் 52 வீதம் வீழ்ச்சியும் 9 வீதம் முன்னேற்றமும் 39 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். மின்சாரம், தண்ணீர் கழிவு துறையில் 49 வீதம் வீழ்ச்சியும் 6 வீதம் முன்னேற்றமும் 45 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். காப்பீட்டுத் துறையில் 48 சத வீதம் வீழ்ச்சியும் 6 சத வீதம் முன்னேற்றமும் 46 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். சுரங்கத்துறையில் 33 சதவீதம் வீழ்ச்சியும் 4 வீதம் முன்னேற்றமும் 63 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர். ஒட்டு மொத்தமாக 66 வீதம் வீழ்ச்சியும் 8 வீதம் ஏற்றமும் 26 வீதம் மாற்றம் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, சென்டர்லிங்க் வாசலில் வரிசையாக வேலையின்றி காத்து இருப்பவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே உள்ளது. மேலும் அரசாங்க உதவி தரும் mygov என்ற இணையதளம் அதிகப்படியான மக்கள் பயன்படுத்துவதால் அந்த நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையில் ஒருமுறை கூட சென்டர்லிங்க் வாசலை மிதிக்காதவர்களைக் கூட முதல் முறையாக, நீண்ட வரிசையில் காக்க வைத்து விட்டது கொரோனா வைரஸ் மற்றும் அதன் பின்னர் வந்த முடக்கம்.

இவ்வாறாக அனைத்து துறைகளும் வளர்ச்சி பெறாமல் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கும் சூழ்நிலையில் அரசாங்கத்தின் உதவியோடு தான், பலரும் இந்த சூழ்நிலையை சமாளிக்கின்றனர். அரசை மட்டும் நம்பி ஒரு நாடு தொடர்ந்து செயல்படுவது கடினம். வாழ்க்கைக்கும் வாழ்வாதாரத்திற்கும் இடை-யிலான இந்த போராட்டத்தில் நாம் அனைவரும் ஒரு முக்கிய முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். அது கொரோனா வைரஸை நம்மால் முற்றிலும் ஒழிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து கொண்டு, அதை எப்படி கட்டுப்படுத்துவது, அதில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்துக் கொள்வது என்கிற தெளிவோடு நாம் செயலாற்ற வேண்டும். தடுப்பூசி, சுய விலகல், முகமூடி அணிதல், நோய் வரின் தனிமைப்படுத்தல் என ஒரு ஒழுக்கமான நடைமுறையே விடியலுக்கான உண்மையான வழி ஆகும். இதை நாம் பின்பற்றும் போது வலிகள் குறைந்து, வழி பிறக்க வாய்ப்பு உள்ளது.



# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- சேவைக்கட்டணம் இல்லை
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்**



**வட்டி 3%**

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478



## நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின் மனதில் இடம் பிடித்த - 10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
**SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE**

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

**Send Money to any Bank In Sri Lanka**

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com

# தமிழர் வாழும் நாடுகளில் தமிழில் மந்திரம் முழங்கட்டும்

● அ.முத்துக்கிருஷ்ணன்

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் நூறு நாட்களில் நிறைவேற்றப்படும் என்று அறிவித்ததை சாதித்துக்காட்டியது தமிழக அரசு. சமூக நீதிப் போராட்டத்தை பெரியார் அறிவித்த நாள் ஆகஸ்ட் 14. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் 1970 இல் சட்டம் கொண்டு வந்தார் அப்போதைய முதல்வர் கருணாநிதி. அதேபோல இந்துவாக பிறந்து தகுந்த பயிற்சி முடித்த யாரும் அர்ச்சகராகலாம் என உச்சநீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு திமுக ஆட்சியின்போது அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தின் கீழ் திருவண்ணாமலை, திருச்செந்தூர், பழனி, மதுரை, ஸ்ரீரங்கம், திருவல்லிக்கேணி ஆகிய ஊர்களில் உள்ள முக்கிய கோவில்களில் ஆறு பாடசாலைகள் அமைக்கப்பட்டு அனைத்து சமூகப் பிரிவினரையும் கொண்ட 240 மாணவர்களுக்கு சமஸ்கிருதம் மற்றும் தமிழ் முறைப்படி அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் 240 பேர் ஒன்றரை வருட பயிற்சியை முடித்தனர். இவர்களில் 207 பேர் தேர்ச்சி பெற்றனர். ஐந்து பேர் உயிரிழந்த நிலையில் 202 பேர் பணிக்காக காத்திருந்தனர். இதில் 2 பேருக்கு மட்டும் பணி வழங்கப்பட்டு, 200 பேர் காத்திருப்பு பட்டியலில் இருந்தனர்.

நடந்து முடிந்த தேர்தல் அறிக்கையில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றும், தமிழ்நாட்டில் அனைத்து கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியிருந்தது. அதன்படி, ஆகஸ்ட் 5ஆம் திகதி தமிழகத்தில் அறநிலையத் துறைக்கு சொந்தமான 47 கோயில்களில் "அன்னைத் தமிழில் அர்ச்சனை" என்ற பெயரில் தமிழில் அர்ச்சனை செய்யும் திட்டம் அமைச்சர் சேகர் பாபுவால் தொடக்கி வைக்கப்பட்டது.

> ஆகஸ்ட் 14ஆம் திகதி அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் திட்டத்தின் கீழ் 58 பேருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணையை வழங்கினார். பயிற்சி பள்ளியில் படித்த 24 அர்ச்சகர்கள் உள்பட 58 பேருக்கு இந்த பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 14ஆம் திகதி அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் திட்டத்தின் கீழ் 58 பேருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணி நியமன ஆணையை வழங்கினார். பயிற்சி பள்ளியில் படித்த 24 அர்ச்சகர்கள் உள்பட 58 பேருக்கு இந்த பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. இவர்கள் வெவ்வேறு கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராக நீயமிக்கப்பட்ட விஷயத்தில் இதற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தந்த நிலையில், சிலர் இதற்கு எதிராக தவறாக பிரச்சாரம் செய்ய தொடங்கினர். கோயில்களில் ஏற்கனவே பணியிலிருந்தவர்களை தூக்கிவிட்டு புதிதாக அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டதாகவும் வதந்திகளை ஏற்படுத்தி சமூகத்தில் உலவ விட்டார்கள். இதுகுறித்து சட்டப்பேரவையில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், கோயில்களிலிருந்து யாரும் வெளியேற்றப்படவில்லை. முறையாக பயிற்சி பெற்றவர்கள்தான் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று விளக்கம் அளித்தார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமஸ்கிருதம் மெல்ல மெல்ல ஆதிக்கம் செலுத்தும் மொழியாக வளர துடித்தது. ஒரு காலத்தில் அரசாட்சி செய்த மன்னர்கள் சிலர் தமிழை விட வேற்று மொழியான சமஸ்கிருதம் சிறந்தது என்பதை நம்ப தொடங்க, மெல்ல தமிழ் மொழி கோவில்களில் இருந்து வெளியேறும் நிலை ஏற்பட்டது. இதன் விளைவு, பழனி முருகன் கோவில் பரம்பரை பண்டாரங்கள் வெளியேற்றப்பட்டு, பிராமணர்களை அர்ச்சகர்களாக நியமிக்க நிலை ஏற்பட்டது. அது முதல்தான் பழனி முருகனுக்கு வட மொழியில் அர்ச்சனை தொடங்கியது. மெல்ல மெல்ல தமிழகத்தின் பெரிய கோவில்களின் எல்லாம் தமிழ் முறைப்படி பூசைகள் செய்துவந்த பூசாரிகள் வெளியேற்றப்பட்டு சமஸ்கிருத அர்ச்சகர்களால் வைதீக பூஜைகள் நடக்க தொடங்கின. பூசைகள் பூஜைகளாக மாறியன., கோயில்கள் கோவில்களாக மாறின. பெண் தெய்வ வழிபாட்டில் அமைந்த கோயில்களிலும் கூட ஆண் பூசாரிகள் தங்கள் கைவசப்படுத்தின.

கோவில்களில் தனிநபர் அர்ச்சனை என்பது முக்கியமான வழிபாட்டு முறையில் ஒன்றாகும், அதை மாற்ற இயலாது. அது தேவையும் இல்லை. அதேநேரத்தில் தேவாரம், திருவாசகம் போன்ற தமிழ்பக்தி இலக்கியங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட தமிழ்வழி அர்ச்சனை முறை பரப்பப்படுவதை ஊக்குவிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார் நீதிபதி ராஜன்.

"தமிழ்வழி அர்ச்சனை, வழிபாட்டு முறை அனைத்துகோவில்களுக்கும் நீட்டிக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அர்ச்சனைக்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒவ்வொருவரும் அவரவர் மொழியில் அர்ச்சனையை செய்யலாம். தமிழ் அர்ச்சனையை கடவுளுக்கு ஏற்கும்" என்பதையும் அக்னிஹோத்திரி தாத்தாச்சாரியாரும் கூறியிருக்கிறார்.

அனைத்து சாதியினரையும் கோவில்கருவறைக்குள் அழைத்து செல்லும் போராட்டத்தை 1970ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று அறிவித்தார் தந்தை பெரியார். அன்றைக்கு கருணாநிதி முதலமைச்சர். கலைஞரின் வேண்டுகோளை




ஏற்று அந்தக் கிளர்ச்சி போராட்டம் பெரியார் கைவிட்டார். இதற்கான மசோதா 2.12.1970-ல் சட்டப் பேரவை, சட்ட மேலவை ஆகிய இரு அவைகளிலும் நிறை வேற்றப்பட்டது.

ஆத்திரமடைந்த பாரம்பரிய எதிர் தரப்பு உச்சநீதிமன்றம் வரை சென்றது. 1972 மார்ச் 15 அன்றுநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், சட்டத்தை எதிர்த்தவரின் மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகத் தோன்றினாலும் ஆகமத்திற்குட்பட்டே அர்ச்சகர் நியமனம் இருக்க வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருந்தது. நீதிமன்றத்தின் உத்தரவை பெரியார் கடுமையாக விமர்சித்தார்.

அடுத்து வந்த எம்ஜிஆர் கோவில் வழக்கங்களில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள்குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க 1982-ல் நீதியரசர் மகாராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவும் அனைத்து சாதியினரையும் உரிய பயிற்சிக்குப் பிறகு அர்ச்சகராக நியமிக்கலாம் என்றது.

இந்தப் பின்னணியில்தான், 2002ல் கேரள உயர்நீதிமன்றம், "ஆகமங்கள், மதப் பழக்க, வழக்கங்கள் அனைத்தும் 'எல்லோரும் சமம்' என்ற இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படைக் கொள்கைக்கு எதிராக இருந்தால், அவை சட்டரீதியாக செல்லாது என்று கூறி, அனைத்து சாதியினரும் அர்ச்சகராக முடியும் என்று தீர்ப்பளித்தது.

தமிழ்நாட்டில் கால்நூற்றாண்டு கால போராட்டத்திற்கு கலைஞர் ஆட்சியில் விடிவு கிடைத்தது. நீதிபதி ஏ.கே. ராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டது, அந்த குழு அர்ச்சக மாணவர்களின் தகுதி, பாடத்திட்டம், பயிற்சிக் காலம், கோவில்களில் நடைபெறும் பூசை முறைகள் ஆகியவற்றை ஆராய்ந்து பரிந்துரைகளை அளித்தது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சென்னை பார்த்தசாரதி கோவில், திருவரங்கம் ஆகிய இடங்களில் வைணவ அர்ச்சகர்களுக்கான பயிற்சிப் பள்ளிகளும் மதுரை, திருவண்ணாமலை, பழனி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் சைவ அர்ச்சகர்களுக்கான பயிற்சிப்பள்ளிகளும் உருவாக்கப்பட்டன. இதற்காக சைவ-வைணவ பயிற்சிப் பள்ளிகளை திறந்து, இட ஒதுக்கீடு அடிப்படையில் 207 மாணவர்கள் இளநிலை பயிற்சி பெற்று தீட்சையும் சான்றிதழும்பெற்றனர். மதுரை மீனாட்சியம்மன் கோவில் ஆதிசைவசிவாச்சாரியர்கள் திரும்பவும் உச்சநீதிமன்றம் சென்றுஅனைத்து சாதி அர்ச்சகர் சட்டத்திற்கு தடை உத்தரவுபெற்றனர்.

தமிழில் அர்ச்சனைக்கு செயல்வடிவம் கொடுத்து நடைமுறைப்படுத்தி பல்லாண்டு காலமாக நீடித்து வந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து கருவறை தீண்டாமை இருள் அகற்றி பெரியாரின் லட்சியத்தை நிறைவேற்றியது தமிழக சமூகநீதி வரலாற்றில் ஒருமைல் கல்.

அர்ச்சகர் வேலை என்பது சங்கீதம், நடனம் அல்லது மனிதர்கள் செய்யும் எல்லா தொழிலும் போன்றது தான். புரோகிதம் செய்வதும், அர்ச்சகராவதும் என்பது ஒரு பயிற்சியில் மனிதனால் செய்ய முடியும் என்பதுவே உண்மை, மனிதர்களில் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் மட்டுமே கோயிலுக்கு சென்று தரிசனம் செய்ய வேண்டும், மற்றவர்கள் சாமியை கும்பிட்டாலே தீட்டு என்று தடுத்தவர்கள், ஆதிக்க வெறிபிடித்த சிலர் இப்பொழுதும் தங்களின் ஆதிக்கம் பறிபோகிறதே, அதிகாரம் பறிபோகிறதே என்று கூச்சலிட்டு வருகின்றனர், மனிதர்கள் சமம் என்று நினைப்பவர்கள் யாவரும் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை நிச்சயம் ஏற்பார்கள்.

ஆர்.எஸ்.எஸ்-இந்து முன்னணி, பாஜகவின் கும்பலுக்கு என்றைக்குமே மனிதர்கள் சமமானவர்கள் அல்லர், இவர்கள் மனித குலத்திற்கே எதிரானவர்கள் என்பதை தொடர்ந்து ஒவ்வொரு பிரச்சனையை கையாள்வதிலும் நிரூபித்து வருகிறார்கள்.

அதேவேளை, உலகளவில் தமிழர்கள் இன்று பல நாடுகளில் வாழ்கின்றனர். அங்கு கோவில்களும் உள்ளன. ஆனால் சமஷ்கிருதம்தான் புகுந்து விளையாடுகின்றது. அங்குள்ளவர்கள் தமிழை புறக்கணிக்கவில்லை. ஆனால் தாம் கற்றவற்றையே மந்திரங்களாக எடுத்தியம்பிவருகின்றனர். எனவே, இந்நிலைமை மாறவேண்டும்.

புரியும் மொழியில் நடவடிக்கை இடம்பெறவேண்டும் என்பது மொழி உரிமை. மனிதனின் அடிப்படை உரிமையும்கூட. எனவே, பூஜைகளின்போது ஓதப்படும் மந்திரங்கள்கூட புரியும் மொழியில் இருந்தால் அது பயன்மிக்கதாக இருக்கும் என்பதே பலரின் கருத்து. அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். அப்போது மதமும் வளரும், மொழியும் வாழும்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


RAVANAS
RAVANAS BLINDS, CURTAIN SHUTTERS DOORS & WINDOWS
Free Measure & Quotes • Delivery & Install • Servicing All Suburbs
Our Services:
Blind Curtains | Plantation Shutter | Roller Shutters | Security Doors | Fly Screens | Outdoor Blinds
Aluminium Doors & Windows | Alfresco Glass Cover | Shower Screens | Mirrors | Wardrobe Doors
Contact: Raja (Roger) 0411 734 484 | 1300 572 540
Ravanas Group Pty Ltd 31/283 Rex Road, Campbellfield VIC 3061
Email : roger@ravanas.com.au
Web: www.ravanas.com.au

# பெருந்தொற்றில் பசி தீர்ப்போர்




















பெருந்தொற்றால் சிட்னியில் முடக்கம் ஆரம்பித்த காலம் முதல் வேலைவாய்ப்பை இழந்தவர்களுக்கான உதவிப்பொருட்களை வழங்கிவருகிறது community care - seven hills என்ற நிறுவனம். இந்நிறுவனத்தின் ஊடாக கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் ஆயிரம் குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

நிவாரணத் திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி நிறுவனத்தின் இணைப்பாளர்களில் ஒருவரான துர்கா ஓன் கூறியவை வருமாறு,

“கடந்த வருடம் இவ்வகையான தேவைகளை எதிர் கொண்டவர்களில் அனேகமானவர்கள் மாணவர்கள் மற்றும் அகதிகளே. தற்போதைய சூழ்நிலையிலும் அந்நிலைமை நீடித்துக்கொண்டுதான் இருக்கிறது.

260 தமிழ் அகதிக்குடும்பங்களும் ( இவற்றில் 60 குடும்பங்கள் இந்தியா பாகிஸ்தான் பங்களதேஷ் ஆகிய நாடுகளை சேர்ந்தவை.) இக்குடும்பங்களுக்கு தேவையான உணவுப்பொருட்களை வாராந்தம் அவர்களுடைய வீடுகளுக்க நேரடியாக வழங்கி வருகின்றோம்.


அக்குடும்பங்கள் அனைவரும் அகதியாக சிட்னியில் வாழ்பவர்கள். தற்காலிகமாக வேலை செய்து கொண்டிருந்த வர்கள் மற்றும் விசா மறுக்கப்பட்டவர் என பல்வேறு விதமான பிரச்சினைகளை தங்களிடத்தே கொண்டிருப்பவர்கள்.

இவ்வாறானவர்களின் வீடுகளுக்கு செல்லும் போது ஆறுதலான வார்த்தைகளையும் தெரிவித்தே வருகின்றோம். ஏனெனில் வீட்டுக்குள்ளேயே முடங்கி கொண்டிருப்பவர்களுக்கு ஆறுதவார்த்தைகள் கூட பெறுதிமிக்கவையே.

இதேவேளை குடும்பங்களின் தனித்தனியே தேவை-களை அறிந்து அவர்களுக்குத் தேவையானவற்றையே வழங்கிவருகின்றோம். இந்த உதவி திட்டத்தில் பல நாடுகளை சேர்ந்தோர் தன்னார்வ தொண்டர்களாக இயங்கி வருகின்றனர்.

இப்பெருந்தொற்றில் பாதிப்பு என்பது அனைவருக்கும் சமாமனது தான். அந்நிலையில் இச் சேவைக்கு பங்களிப்பு நல்கிவருவோருக்கும் நன்றி சொல்வது கடமையாகும். இல்லாதோருக்கு இயன்றவரை உதவிக் கொண்டிருக்கவேண்டியதே எங்களுடைய இலக்காக இருக்கிறது. தொடர்ந்து செய்வோம். “ – என்றார்.

# மாதராசிபலன்



## மேடம்

எந்த ஒரு காரியத்தையும் திறமையாக திட்டமிட்டு சரியான நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றல் உடைய மேஷ ராசியினரே, இந்த மாதம் எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்களில் வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் இருக்கும். கணவன் மனைவிக்கிடையே நல்லுறவு ஏற்படும். அரசியல் துறையினருக்கு எந்த வாக்குறுதியையும் கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு ஆசிரியர் ஆதரவு கிடைத்தாலும் சக மாணவர்களிடம் கவனமாக பழகுவது நல்லது. குடும்பத்தில் ஏதாவது சண்டை சச்சரவு ஏற்பட்டு பின்னர் சரியாகும்.

## கடகம்

தயாளகுணம் படைத்த கடக ராசியினரே, இந்த மாதம் ராசிக்கு செவ்வாய் பகவான் வருகை தருகிறார். சுபச்செலவு ஏற்படும். புதிய காரியங்களில் ஈடுபடும் போது யோசித்து செய்வது நல்லது. மன அமைதி பாதிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். நண்பர்களிடம் கவனமாக பேசி பழகுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் உயர் அதிகாரிகளை அனுசரித்து செல்வது நல்லது. வீண் மனக்கவலை ஏற்பட்டு நீங்கும். புதிய செயல்களை யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினருக்கு அனைத்து வகையிலும் நன்மைகள் கிடைக்கும்.

## துலாம்

எடுத்த காரியத்தை செய்து முடிக்கும் வரை ஊண், உறக்கம் இன்றி கடுமையாக உழைக்கும் துலா ராசியினரே, இந்த மாதம் ராசிக்கு ஒன்பதாமிடத்தில் சஞ்சரிக்கும் ராசியாதிபதி சுக்கிரனால் எடுத்த காரியம் கைகூடும். விரோதிகளும் நண்பர்களாவார்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும். பண வரத்து திருப்தி தரும். கடன் விவகாரங்களில் எச்சரிக்கை தேவை. வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்க பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் உண்டாகும். கலைத்துறையினர் சீரான நிலையில் இருக்கும்.

## மகரம்

எல்லோராலும் பாராட்டப்படும் வகையில் நடந்து கொள்ளும் மகர ராசியினரே, இந்த மாதம் வரவை போலவே செலவும் இருக்கும். திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளை சமாளிக் கும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக் கும். நிம்மதி ஏற்படும். கலைத்துறையினருக்கு நல்ல லாபம் கிடைக்கும். அலைச்சல் இருக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு நற்பெயர் எடுப்பதற்குண்டான சூழ்நிலைகள் உருவாகும். எதிர்பார்த்த பதவிகள் வந்து சேரும். மாணவர்களுக்கு வழக்கத்தை விட கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது நல்லது.

## இடபம்

நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்த கொள்ளும் ரிஷப ராசியினரே, இந்த மாதம் எதிர்பாராத திருப்பம் உண்டாகலாம். ராசிக்கு 2ல் ராசிநாதன் சுக்கிரன் சஞ்சாரம் இருப்பதால் எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். திறமையாக எதையும் சமாளிப்பீர்கள். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். சூரியன் சஞ்சாரம் பொருள் வரவை தரும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். இழுபறியாக இருந்த காரியங்களில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும். கலைத்துறையினருக்கு தகுந்த மரியாதையும் மதிப்பும் கிடைக்கும். விருதுகள் கிடைக்கும். மாணவர்களுக்கு தேர்வுகள் பற்றிய பயம் நீங்கும்.

## சிம்மம்

கருமமே கண்ணாக இருக்கும் சிம்ம ராசியினரே, இந்த மாதம் முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். ராசியைப் பார்க்கும் குருவால் தன்னம்பிக்கை ஏற்படும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும். பெண்களுக்கு தடைபட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மனதெளிவு உண்டாகும். பண வரத்து இருக்கும். கலைத்துறையினருக்கு அனைத்து விதமான நிலைகளிலும் நன்மைகளைப் பெறுவீர்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். மாணவர்களுக்கு திறமை வெளிப்படும். சக மாணவர்கள் ஆதரவாக இருப்பார்கள். கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

அனைவருடன் நல்லமுறையில் பழகக்கூடிய விருச்சிக ராசியினரே, உங்களுக்கு வரும் முன்கோபத்தை தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். இந்த மாதம் எதிர்பாராத செலவு உண்டாகும். எதிர்பார்த்த வெற்றி கிடைப்பதில் தாமதம் உண்டாகும். எதிர்பாராத பணவரத்தும் இருக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். தொழில் வியாபாரம் சிறிது மந்தமான நிலையில் காணப்பட்டாலும் வருமானம் குறையாத நிலை இருக்கும். போட்டிகள் பற்றிய கவலையை விட்டுவிட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

## கும்பம்

மனத்துணிவும், எதையும் செய்து முடிக்கும் ஆற்றலும் அதிகம் பெற்ற கும்ப ராசியினரே, நீங்கள் அதிகமாக உழைப்பவர்கள். இந்த மாதம் வீண்கவலை ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். அதே நேரத்தில் எதிர்பாராத செலவும் ஏற்படும். உடமைகளை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலைதூக்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

## மிதுனம்

சிக்கலான காரியங்களையும் சுமூகமாக முடிக்கும் திறமை உடைய மிதுன ராசியினரே, நீங்கள் எடுக்கும் முடிவு நீண்ட ஆலோசனைக்குப் பிறகே இருக்கும். இந்த மாதம் ராசியில் சுக்கிரன் இருப்பதால் பொருள் வரவையும் சேமிக்க வேண்டும் என்ற எண்ணத்தையும் தரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். கலைக்காரகன் சுக்கிரனின் இருப்பால் கலைத்துறையினருக்கு சிறப்பான காலகட்டமாக இருக்கும். தாமதமாகி வந்த வாய்ப்புகள் அனைத்தும் திரும்ப கிடைக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு இந்த காலகட்டம் மந்தமாக காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி நீங்கும். எதிர்பார்த்த வெற்றி கிடைக்கும்.

## கன்னி

நட்புக்கு முதலிடம் கொடுத்து காரியங்களை செய்யக் கூடியவராக இருக்கும் கன்னிராசியினரே, இந்த மாதம் ராசியாதிபதி புதன் ராசிக்கு 9ல் சஞ்சாரம் செய்வதும் சூர்யன் - ராகு சேர்க்கை பெறுவதும் பணவரத்தை அதிகரிக்கும். விருப்பமானவர்களை சந்தித்து உரையாடி மகிழ்ச்சி அடைவீர்கள். மனதுணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. கலைஞர்களுக்கு தங்குதடையின்றி புதிய வாய்ப்புகளைப் பெறலாம்.

## தனுசு

நிதானமாகவும், செம்மையாகவும் காரியத்தை செய்து வெற்றி பெறும் தனுசு ராசியினரே, இந்த மாதம் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் மாறுகிறார். இருப்பினும் தனஸ்தானத்தைப் பார்ப்பதால் பணவரத்தை அதிகப்படுத்துவார். தொழில் வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்க பெறுவீர்கள். குடும்பத்தில் வாழ்க்கை துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும். கலைத் துறையினருக்கு உங்கள் கௌரவம் உயரும். மாணவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டி இருக்கும்.

## மீனம்

தூய உள்ளம் படைத்த மீன ராசியினரே, இந்த மாதம் சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். திடீர் கோபம் உண்டாகும். கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. அடுத்தவர்களால் இருந்த தொல்லைகள் குறையும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். கூடுதலாக எதிலும் உழைக்க வேண்டி இருக்கும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு மிகுந்த உகந்த காலகட்டமிது. கைக்கு எட்டிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்தி முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். அரசியல்வாதிகள், சமூக சேவகர்களுக்கு பலன்கள் நன்மை தீமை என கலந்து கிடைத்தாலும் சிறப்பாக இருக்கும்.


VIJITHA TEXTILES
விஜிதா புடவை மாளிகை
அனைத்து
வயதினருக்குமான
ஆடை
அணிகலன்களையும்
மலிவான விலையில்
நீங்கள் எம்மிடமிருந்து
எப்போதும்
பெற்றுக்கொள்ள
முடியும்
மலிவு விலை!!!
639 IPSWICH ROAD,
ANNERLEY QLD.
0470 295 383

ஊழிக்காலம்-2

26



# புயலுக்குப்பின்...

நீங்க முறிப்புக்கு வாற நீங்கதானே..” பார்வதியை நோக்கி ஒரு பெண் கேள்விகேட்டாள்.

“ ம் ஓம் எனக்கு சொந்தக் காரர் இருக்கினம் அங்க.”

“என்னத்தெரியாதா? நான் அங்கதான். உங்களக் கண்டிருக்கிறன்.”

“கண்ட நினைவிருக்கு எங்க கண்டதெண்டுதான் நினைவில்லை”

“நான் முறிப்பிலதான் இருக்கிறன் அங்க மாவீரர் துயிலுமில்லத்தில கூட்டுறது துப்பரவு

செய்யிற வேலை செய்யிற நான். மாசம் நாலாயிரம் ரூவாவுக்கு சாமான் தருவினம்.”

“ஓ...அப்பிடியே”

“எனக்கு நாலு பிள்ளையள். மூத்தது பெரிசாகி ரெண்டுநாள் அதுக்குள்ள ஆரோ காட்டிக் குடுத்து என்னை இயக்கமெண்டு பிடிச்சுக் கொண்டந்திட்டாங்க”

“உங்கட கதை எங்களப்போல இல்லை எப்பிடி”

“அய்யோ அம்மா நான் கேரளா. என்ர மனிசன் எண்பத்தாறில அகதியா வந்து அங்க இருந்த நேரம் நான் அவர விரும்பி கலியாணஞ்செய்தன். பொறவு அவர் இலங்கைக்கு வர புள்ளையளோட நானுங்கூடி வந்திட்டன்.”

“அட கடவுளே....உதை நீங்க அவங்களட்ட சொல்ல இல்லையா”

“அய்யோ எத்தன முறை நான் சம்பளத்துக்கு வேலைசெஞ்சண்டு அவங்களட்ட சொன்ன நம்ப மாட்டமெண்டிட்டாங்கள்”அவள் அழுதாள்.

“அழாதீங்க வீட்டிலயிருந்து ஆரும் வந்தா அவங்கதான் இதுக்கு முயற்சி எடுக்கவேணும்” எனறாள் பார்வதி.

அவர்கள் அந்த முகாமின் முன்பக்கம் வந்துவிட்டனர். ஒன்பது பட்டுக்கம்பி அடிக்கப்பட்ட கம்பிக்கட்டைகளோ பாலும் வெடுக்குநாறியும் காயாவு-மாக இருந்தன. பெரிய அகலமான கிரவல் வீதிமுன்னே இருந்தது வேலிக்கரையோரமாக நாலடி ஆழமும் இரண்டரை அடி அகலமும் கொண்ட அகழி மூன்று காணிகளையும் சுற்றி வெட்டப்பட்டிருந்தது.

அவர்களை சந்திக்க வன்னிப் பிராந்திய புனர்வாழ்வு முகாம்களின் பொறுப்பதிகாரியும் அவர்களுடைய பம்பமடு முகாம் பொறுப்பிலிருந்த கப்டன் லக்மாலியும் வந்திருந்தனர்.

“எப்பிடி இடம் பிடிச்சிருக்கா?” என்று வந்திருந்த அதிகாரி பிரிகேடியர் கேட்டான்.

இந்தக்கேள்விக்கு யாரும் பதிலளிக்க வில்லை. உங்களுக்கான தொழில் பயிற்சி இங்குதான் நடக்கும். அதுக்கான மெசி-னறீஸ் வந்துகொண்டிருக்கு. இன்னும் ரெண்டொரு வாரத்தில வந்திடும்.” என்றான்.

“இங்க எங்கட அம்மா அப்பா பாக்க வருவினமா?” என்று கேட்டாள் ஒரு பெண்.

“நிச்சயமா வருவாங்க உங்கட பழைய காம்பில அட்ரஸ் கொடுத்து விடுவாங்க”.என்றான்.

“இஞ்ச தண்ணியே இல்லை “என்றாள் ஒருத்தி.

“ஓ...திடீரென்று நடந்த இடமாற்றம். இண்டைக்கு மாலையில எல்லாம் சரிப்படுத்துவம்...வேற?”

அப்போது யாரும் எதிர்பாராத வகையில் அந்த கேரளத்துப் பெண் முன்னே வந்தாள்.

“என்னை எதுக்கு இஞ்ச வச்சிருக் கீங்க? நான் இயக்கமில்லை. இங்க யாரை யாவது கேட்டுப்பாருங்க..நான் அவங்க கூட இருந்தனா எண்டு.”ஆக்ரோசமான குரலில் அவள் பேச ஆரம்பித்ததும், சலசலப்பாக இருந்த இடம் அமைதியா-னது.

“உங்கட பிரச்சனைய நாங்க கவனிக்கிறம்” என்று லக்மாலி சிங்களத்தில் சொன்னதை யாரோ மொழி பெயர்த்து அவளுக்கு சொன்னதும் அவள் வெகுண்டாள்.

“சொல்லுவீங்கதானே நாம் பெத்த பொண்ணு வயசுக்கு வந்திட்டா. அவளை பக்கத்தில இருந்து பாக்க வேண்டிய நான் இஞ்ச இருக்கிறன். நீங்க மலடுதானே பெத்தவலி உங்களுக்கு எப்பிடி தெரியும்” என்று சத்தமாக ஏசியவாறே அவள் கூட்டத்தை விட்டு வெளியே போனாள்..

சற்று நேர அமைதியைக் கலைத்த பிரிகேடியர் “உங்கட உணவு, மருத்துவம், பாதுகாப்பு இவ்வளவும்தான் எங்களுக்கு பொறுப்பு அதைமட்டும்தான் நாங்க செய்யலாம் மற்ற விடயங்களில பொறுப்பெடுக்க வேற செக்சன் அதிகாரியள் இருக்கினம். நீங்க எங்களோட இதைப்பேசி நாங்க என்ன செய்ய முடியும்.” என்றான் குரலில் கோபம் இல்லை. ஆற்றாமையே தொனித்தது.

“உங்களுக்கு கன்ரீன் வசதியும் செய்து தரலாம்.”என்றான்.

அந்த கன்ரீன் ஒருமாதமாகியும் வரவில்லை. பார்வையாளர்கள் கொண்டு வரும் பொருட்கள் மட்டுமே வந்தன. அதைவிட வழங்கலில் வரும் பொருட்கள் மட்டும்தான். வேறெதுவுமில்லை. விசேடமாக இங்கே தேநீருக்கான வழங்கல் வந்தது. சீனி, தேயிலை, பால்மா பக்கட்டுகள் என்பன வழங்கப்பட்டன. ஆயினும் அவற்றை ஒரே இடத்தில் தேநீர் தயாரிப்பதற்கான பாத்திரங் கள் இல்லாமையால் குழுக்களுக்கு



பிரித்துக் கொடுத்தார்கள். ஒவ்வொரு குழு தலைவியும் தன் குழுவினருக்குப் பகிர்ந்து கொடுத்தார்கள்.

“பீ” புளொக்கின் லீடராக பார்வதி நியமிக்கப்பட்டிருந்தாலும், விரை விவேலயே அப்பதவியை இழந்துவிட் டாள். அடுத்த படியாக அடுத்தபடியாக பம்பமடுவில் மொழிபெயர்பில் நின்ற ரோசா அந்தப் பொறுப்புக்கு விடப்பட்டாள்.

மாசிப்பனி மூசிப் பெய்துகொண் டிருந்தது. குளிர் அவள் முகத்தி லறைந்தது. போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்தாள். ஆனால் ஆறுமணியாவதற்குள் அவளு டைய குடிலின் பின்புறமாக உள்ள சிறு மைதானத்தில் ஆண்கள் பேசிக்கொள்ளும் குரல்கள் கேட்டன.

‘சரிதான் ஆமிக்காறர் வந்திட் டாங்கள்போல” என எண்ணியவள் தன் கைகளை குளிருக்கு இதமாக இரு தோள்களிலும் மார்புக்கு குறுக்காக போட்டபடியே வெளியே போனாள்.

அவளைக் கண்டதும் அவர்களில் ஒருவன்,

“அம்மா வாங்க, உடன உடன லைன் சொல்லுங்க எல்லாருக்கும். இக்மனட்ட இக்மனட்ட” என்றான்.

‘அட கடவுளே இன்னும் பிள்ளைகள் எழுப்பயில்லையே.... வழமையா எட்டுமணிக்குத்தானே லைன் அதோட குளிர்வேற’ அவள் சிந்தித்துக்கொண்டு நிற்க,

“சொல்லுங்கம்மா... சீக்ரம்... இக் மனின் கியன்ன” என்றான். அவள் பொது வாக அவ்விடத்தில் நின்றபடியே

“ட்டாய்....எல்லோருக்கும் லைனாம் லைனாம் வாங்கோ...”என்று தன் பிரசித்தி பெற்ற குரலில் ஓலமிட்டாள். அந்தக் கூச்சலைத் தொடர்ந்து ஒருவர் இருவர் குடிலைவிட்டு வெளியே வந்து பார்த்தாலும் அவர்கள் லைனுக்கு வருவதாயில்லை. இவர்களும் விடுவதா யில்லை. அவர்கள் காணும்படியாக தனது குடிலில் படுத்திருந்தவர்களை தட்டி எழுப்பினாள்.

“எழும்புங்கடி லைனாம். என்ற வள் தொடர்ந்து பக்கத்திலுள்ள இரண்டுமூன்று குடில்களுக்குள்ளும் போய் சத்தமிட்டுவிட்டு திரும்பி வந்தாள்.

மைதானத்தில் நின்ற ஆமி ஒருவ-னிடம்,

“என்ன இவ்வளவு வெள்ளெண இந்தநேரம் வந்திருக்கிறீங்க ....ஆமை-ரயும் ஓட விட்டுட்டீங்களா?” என்றாள் கிண்டலாக.

“எங்களுக்கு ஓடர் வந்தா நாங்க வந்தம்” என்றான் அவன். என்றாலும் பெண் படையினர் யாரும் வரவில்லையே என்று அவள் யோசித்து அதைக் கேட்பதற்குள் அங்கே ஒரு பெண்சிப்பாய் தூக்கக்கலக்கத்துடன் வந்து சேர்ந்தாள் .

அவளைக் கண்டதும்

“போங்க போய் கூட்டிட்டு வாங்க என்றான் அந்த ஆமிக்காரன். அவனுக்கு மைதானத்துக்கு அப்பால் போக அனுமதி இல்லை. எனவே அந்த பெண்சிப்பாய் குடிசைகளின் இடையில் புகுந்து மறைந்தாள்.

வரிசைவரிசையாக எட்டு நிரைகளும், ஒவ்வொரு நிரைகளிலும் இருபது அடிக்கொன்றாக பத்துமுதல் பதினான்கு வரையான குடிசைகள் கொண்டதான அந்தஇருபத்தைந்து ஏக்கர் பரப்பளவான வளவினுள் குடிசைகளுடாக நடந்து பின்னே சென்றாள் அந்தச் சிப்பாய். ஆண் அதிகாரியுடன் வந்த ராணு வத்தினர் பொறுமையின்றி மைதானத் தில் அங்குமிங்குமாக உலவித்திரிந்தனர். அவர்களுக்கு மட்டும் உள்ளே செல்ல அனுமதி இருந்தால் கூடாரங்களைக் கிழித்தாவது பெண்களை வெளியே கொண்டுவருவார்கள் போலிருந்தது.

“அந்தா பிள்ளையள் வருகினம்” என்றாள் பார்வதி.


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco CARGO

# Covid க்கு முடியாது கிறிஸ்மஸ்ஸையோ Transco வையோ நிறுத்துவதற்கு....




WE ARE DOING BUSINESS AS USUAL

Christmas Shipping Schecdule

| CUT OFF | EST ARIVAL IN SL | CUT OFF | EST ARIVAL IN SL |
|---|---|---|---|
| September 04 | Oct 12 | September 18 | Oct 26 |
| September 11 | Oct 19 * | September 25 | Nov 02 |
| October 02 | Nov 09 | October 23 | Nov 30 * |
| October 09 | Nov 16 * | October 30 | Dec 07 * |
| October 19 | Nov 23 | | |
| November 01 | Dec 14 | November 05 | Dec 28 |
| November 08 | Dec 21 * | November 27 | Jan 04 * |
| December 04 | Jan 11 | December 18 | Jan 25 |
| December 11 | Jan 18 * | | |
| 2022 | | | |
| January 08 | Feb 15 * | January 22 | Mar 01 * |
| January 15 | Feb 22 | | |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices



Shop online in Australia have it delivered to Sri Lanka

Transco Shopping

transcoshopping.lk

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU